Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 06

செவ்வாய்க்கிழமை
02 டிசெம்பர் 2025

கார்த்திகை 16 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## நயினாதீவு-குறிகாட்டுவான் படகுச்சேவை வழமைக்கு

யாழ்ப்பாணம், டிசெ.2
சீரற்ற காலநிலை காரணமாகத் தடைப்பட்டிருந்த நயினாதீவு-குறிகாட்டுவான் தனியார் படகுச்சேவை நேற்றுத் திங்கட்கிழமை முதல் மீண்டும் வழமைக் »11

வங்காள விரிகுடாவின் தற்போதைய நிலைவரப்படி

# இன்னொரு புயலுக்கு சாத்தியங்கள் இல்லை

### வதந்திகளைப் பரப்ப வேண்டாம்
### பேராசிரியர் பிரதீபராஜா அறிவுறுத்து



**யாழ்ப்பாணம், டிசெம்பர் 2**

**மீண்டும் ஒரு புயல் வருமா என பலர் வினவுகின்றார்கள். இன்றைய நிலையில் வங்காள விரிகுடாவில் டித்வா புயலைத் தவிர வேறு எந்த காற்றுச்சுழற்சியோ, வளிமண்டல மேலடுக்குச் சுழற்சியோ இல்லை - இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புவியியல் துறை பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார்.** »11



தரைவழிப்பாதை துண்டிக்கப்பட்டுள்ள

## குஞ்சுக்குளம் மக்களுக்கு ஹெலிகொப்டரில் உதவி!

மன்னார், டிசெ. 2
மன்னாரில் தரைவழிப் பாதை துண்டிக்கப்பட்டு தொடர்புகள் இல்லாமல் அவதிப்பட்டுவரும் குஞ்சுக்குளம் கிராம மக்களுக்கு ஹெலிகொப்டர் ஊடாக »11



இளங்குமரன் எம்.பி.யைக் கண்டித்து

## கறுப்புப் பட்டியுடன் கிராம அலுவலர்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 2
கிளிநொச்சி உமையாள்புரம் கிராம அலுவர் ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரனால் தாக்கப்பட்டதைக் கண்டித்து, கறுப்புப் பட்டிகளுடன் பணியில் »11

## யாழில் மீண்டும் எலிக்காய்ச்சல்!

### பொதுமக்களை அவதானமாக இருக்குமாறு மருத்துவ கலாநிதி கேதீஸ்வரன் விளக்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 2
அண்மைய சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து, யாழ்ப்பாணத்தில் எலிக்காய்ச்சல் அதிகரித்து வருகின்றது. இதனால், ஏற்கனவே இருவர் உயிரிழந்துள்ள நிலையில் பொதுமக்கள் மிகவும் அவதானமாக இருப்பது அவசியம் இவ்வாறு யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவுறுத்தியுள்ளார். »11



## வடக்கு மாகாண மக்களுக்கு துயர்துடைப்பு மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், டிசெ. 2
தற்போதைய இயற்கைப் பேரிடரைக் கருத்திற் கொண்டு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால் வடக்கு மாகாணத்தில் துயர்துடைப்பு முகாம் முன் »11

## ம.உ. ஆணைக்குழுவின் பணிகள் ஒத்திவைப்பு!




யாழ்ப்பாணம், டிசெ. 2
நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலையைக் கருத்திற்கொண்டு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணை நடவடிக்கைகள் பிற்போடப்பட்டுள்ளன. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதான காரியாலயங்கள் »11

## டித்வா அழிவை ஆராய்வதற்கு கட்சித் தலைவர்கள் கூட்டம்!

### முன்னாள் ஜனாதிபதி ரணில் அழைப்பு



கொழும்பு, டிசெ. 2
டித்வா புயலால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக, முன்னாள் ஜனாதிபதி ரணில் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்துக்கு அழைப்பு விடுத் »11



முச்சந்தி முராரி

'இந்த அனர்த்த நேரத்திலையும் நரி தன்ர அரசியலில கவனமா இருக்குது கண்டியளோ'

வெள்ளத்தில் காணாமற்போன

## யாழ்ப்பாண இளைஞர் சடலமாக நேற்று மீட்பு!

வவுனியா, டிசெ. 2
யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த பேருந்து, கலா ஓயா பகுதியில் வெள்ளத்தில் சிக்கிய நிலையில் காணாமற்போன யாழ்ப்பாண இளைஞர் நேற்றுச் சடலமாக »11

## நிர்ணய விலையை மீறின் கடுமையான நடவடிக்கை!

### யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 2
தற்போதுள்ள இடர் நிலைமைகளைக் காரணம்காட்டி செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தினாலோ அல்லது நிர்ணயிக்கப்பட்ட விலைகளை மீறி விற்பனை செய்தாலோ கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார். »11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு!

## திருகோணமலையில் சம்பவம்

திருகோணமலை, டிசெ. 2

திருகோணமலையில் நேற்று மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலையில் உள்ள சீன துறைமுக நகர் காவல் பிரிவுக்கு உட்பட்ட ஐந்தாம் கட்டைப் பகுதியில் இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. மோட்டார்சைக்கிளில் வந்த நபரொருவரே இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளார். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம)

# மரக்கறி விலைகள் சடுதியாக உயர்வு

கொழும்பு, டிசெ.2

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் மரக்கறி களின் மொத்த விலைகள் சடுதியாக உயர்ந்துள்ளன.

ஒரு கிலோகிராம் கரட் 700 முதல் ஆயிரம் ரூபாவரை விற்பனை செய்யப்படுகிறது. போஞ்சி, லீக்ஸ் போன்ற மரக்கறிகளும் 500 ரூபா முதல் 800 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.

கடந்த வாரங்களில் 30 ரூபாவுக்கு விற்பனையான ஒரு கிலோகிராம் பூசணி தற்போது 100 முதல் 130 ரூபாவரை தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் விற்பனை செய்யப்படுகிறது.

மழை மற்றும் மண்சரிவு காரணமாக பெரும்பாலான மரக்கறித் தோட்டப் பயிர்கள் அழிவடைந்தமையே இந்த விலை உயர்வுக்குக் காரணம் எனத் தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தின் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். (எ-இ)

# நிவாரண நிதி வழங்குவதற்கு இணையத்தளம் அறிமுகம்

கொழும்பு, டிசெ.2

இயற்கை இடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண நடவடிக்கைகளுக்கு நிதி உதவி வழங்குவதை இலகுபடுத்தும்வகையில் டிஜிற்றல் பொருளாதார அமைச்சு இணையத்தளம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

"Stand With Sri Lanka" எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த இணையத்தளத்தை https://donate.gov.lk என்ற முகவரி ஊடாக அணுக முடியும். உலகளாவிய சமூகம், வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் மற்றும் உலகெங்கிலும் உள்ள பிரஜைகள், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ள வங்கிக் கணக்குகளுக்கு நிதி உதவியை வழங்கமுடியும். இந்த உத்தியோகபூர்வ இணையத்தளத்தில், அனைத்து நிதிப்பங்களிப்புகளையும் பாதுகாப்பாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் செலுத்துவதற்கான வழிமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அனைத்து நிதிப்பங்களிப்புகள் தொடர்பான சரியான தகவல்களும், கணக்கு விவரங்களும் இணையத்தளத்தில் உள்ளிடப்பட்டுள்ளன. இந்த நிதிப்பங்களிப்புகள் 100 சதவீதம் அரசாங்கத்தின் அவசர நிவாரண நடவடிக்கைகளுக்கு நேரடியாகப் பயன்படுத்தப்படும் என அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

**சுபிரி தன சம்பத** — DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 28.11.2025 | வெள்ளிக்கிழமை | M | 4 6 9 5 8 4 | 0735 |
| 29.11.2025 | சனிக்கிழமை | M | 1 6 0 1 5 6 | 0736 |

**Super Ball** — DLB

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 28.11.2025 | வெள்ளிக்கிழமை | 3001 | X | 01 21 28 36 |
| 29.11.2025 | சனிக்கிழமை | 3002 | I | 07 08 74 75 |

**சனிதா** — DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 28.11.2025 | வெள்ளிக்கிழமை | V | 16 40 65 80 | 5162 |
| 29.11.2025 | சனிக்கிழமை | S | 23 37 63 74 | 5163 |

**SASIRI** — DLB

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 28.11.2025 | வெள்ளிக்கிழமை | 0831 | 05 26 48 |
| 29.11.2025 | சனிக்கிழமை | 0832 | 08 22 25 |

**லக்ன ராசி** — DLB

| திகதி | தினம் | ராசி | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 28.11.2025 | வெள்ளிக்கிழமை | துலாம் | 12 25 28 55 | 4713 |
| 29.11.2025 | சனிக்கிழமை | துலாம் | 29 49 53 62 | 4714 |

**KAPRUKA** — DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 28.11.2025 | வெள்ளிக்கிழமை | D | 22 | 02 23 28 69 | 2177 |
| 29.11.2025 | சனிக்கிழமை | G | 27 | 20 37 60 70 | 2178 |

**அத கோடிபதி** — DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 28.11.2025 | வெள்ளிக்கிழமை | W | 14 34 48 58 | 2827 |
| 29.11.2025 | சனிக்கிழமை | V | 06 16 31 55 | 2828 |

# வழமைக்குத் திரும்பும் பொதுப்போக்குவரத்து

## வடக்கு, மலையகத்துக்கான ரயில் சேவைகள் தாமதமாகும்

கொழும்பு, டிசெ.2

**இயற்கைப் பேரிடரால் முழுமையாக நிலைகுலைந்திருந்த பொதுப் போக்குவரத்துச் சேவைகள் தற்போது இயல்புக்குத் திரும்பியுள்ளன.**



கொழும்பு - யாழ்ப்பாணம் பேருந்து போக்குவரத்துச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், கரையோர வீதி, பிரதான வீதி, புத்தளம் வீதி மற்றும் களனிவெளி ஆகிய ரயில் தடங்களில் ரயில் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் நேற்று முதல் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அலுவலக ரயில் சேவைகள் அதிகளவில் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

வடக்கு ரயில் தடம் மற்றும் மலையக ரயில் தடம் என்பன மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கால் மிக மோசமாக சேதமடைந்துள்ளதால் அந்தப் பகுதிகளுக்கான ரயில் சேவைகளை மீள ஆரம்பிப்பது தாமதமாகும் என ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பொலநறுவை, மன்னம்பிட்டிய ஆகிய பகுதிகளில் ரயில் தடங்கள் சேதமடைந்துள்ளதால் வடக்குக்கான ரயில் சேவையை ஆரம்பிப்பதிலும், கிழக்குக்கான ரயில் சேவையை ஆரம்பிப்பதிலும் தாமதம் ஏற்படும் என ரயில் திணைக்களம் குறிப்பிட் டுள்ளது. மலையகத்துக்கான ரயில் தடங்கள், சமிக்ஞைக் கருவிகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளதால், மலையகத்துக்கான ரயில் சேவைகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்று உறுதியாகக் கூறமுடியாதுள்ளது என்றும் ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கரையோர ரயில் தடத்தில் பெரியளவில் பாதிப்பு ஏற்படாததால் கரையோரத்துக்கான ரயில் சேவை வழமையான நேர அட்டவணைக்கு அமைய இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய மீள்கட்டமைப்புக்கு 31 பில்லியன் ரூபா தேவை

**கொழும்பு, டிசெ.2**
**இயற்கை இடரால் பாதிக்கப்பட்டுள்ள விவசாய, நீர்ப்பாசனக் குளங்கள் மற்றும் சேதமடைந்த கால்வாய்களைச் சீரமைப்பதற்காக கடந்த 28ஆம் திகதி வரை பெறப்பட்ட தரவுகளுக்கு அமைய 31 பில்லியன் ரூபா தேவைப்படும் என்று வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.**

சர்வதேச உதவிக்கு வேண்டுகோள் விடுத்துள்ள அமைச்சு, கனமழையால் சேதமடைந்த நெற்செய்கை மற்றும் காய்கறி மீள் உற்பத்திக்காக 15 பில்லியன் ரூபா நிதி கோரியுள்ளது.

5 இலட்சத்து 10 ஆயிரம் ஹெக்டேயரில் பயிரிடப்பட்ட நெற்பயிர்கள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுள்ள நிலையில், அந்த நிலங்களில் மீண்டும் பயிரிட சர்வதேச நன்கொடையாளர்களிடம் இருந்து ஒரு இலட்சத்து 12 ஆயிரம் மெற்றிக்தொன் யூரியா, 30 ஆயிரம் மெற்றிக்தொன் எம்.ஓ.பி, 30 ஆயிரம் மெற்றிக்தொன் ரி.ஓ.பி உரங்களை அரசாங்கம் கோரியுள்ளது.

அதேவேளை, நீர்ப்பாசனக் குளங்களைச் சீரமைக்க 4.8 பில்லியன் ரூபாவும், அணைக்கட்டுகளைப் பழுதுபார்க்க 900 மில்லியன் ரூபாவும், சிறு நீர்ப்பாசன முறைகளுக்கு 83 பில்லியன் ரூபாவும், கால்வாய் சீரமைப்புக்கு 1.8 பில்லியன் ரூபாவும் தேவைப்படும் என்று மதிப்பிடப்படுகின்றது. (எ-இ)

## சீன செஞ்சிலுவைச் சங்கம் 1,00,000 டொலர் நிதியுதவி

கொழும்பு, டிசெ.2
இலங்கை தற்போது எதிர்நோக்கும் இடர் நிலைமையைக் கருத்திற்கொண்டு சீன செஞ்சிலுவைச் சங்கம் அவசர நிதி உதவியாக ஒரு இலட்சம் அமெரிக்க டொலரை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துக்கு வழங்கியுள்ளது.

இந்தத் தகவலை இலங்கையில் உள்ள சீனத்தூதரகம் தெரிவித்துள்ளது. அத்துடன் இடர் நிவாரணப் பணிகளை வலுப்படுத்தும் வகையில், இலங்கையில் உள்ள சீன வர்த்தக சம்மேளனம் மற்றும் வெளிநாட்டு சீனச் சங்கம் இணைந்து நன்கொடைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளன. இந்த இரு அமைப்புகளும் இணைந்து இடரால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் 10 மில்லியன் ரூபாவைத் திரட்டியுள்ளன. (எ-இ)

## எம்.ஓ.பி. உரம் இலவச விநியோகம்

யாழ்ப்பாணம், டிசெ.2
கைதடி கமநல சேவை நிலையத்தில் நெற்செய்கையாளர்களுக்கான எம்.ஓ.பி. உரம் காலை 9 மணி முதல் பிற்பகல் 3மணிவரை இலவசமாக வழங்கப்படவுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை நாவற்குழி மேற்கு ஜே/294 கிராம அலுவலர் பிரிவிற்கும், நாளை புதன்கிழமை மற்றும் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் நாவற்குழி கிழக்கு ஜே/295 கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் வழங்கப்படவுள்ளது. பயனாளிகள் தேசிய அடையாள அட்டை மற்றும் ஏக்கர் வரிப் பற்றுச்சீட்டையும் சமர்ப்பித்து உரத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41-159)




## GovPay ஊடாகவும் நிதி வழங்கலாம்

கொழும்பு, டிசெ.2
இயற்கை இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண நிதி வழங்கும் வசதி GovPay செயலியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

GovPay செயலி ஊடாக யாரும் எந்த நேரத்திலும், உடனடியாக நன்கொடைகளை வழங்கமுடியும். இந்த நன்கொடை நிதி உடனடியாக நிவாரண நிதியில் வரவு வைக்கப்படும் என்று டிஜிற்றல் பொருளாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

GovPay உடன் இணைக்கப்பட்டுள்ள இலங்கையிலுள்ள வர்த்தக வங்கிகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட FinTech செயலிகள் (Apps) பலவற்றின் மூலம் இடர்நிவாரண நிதிக்கு நிதியுதவி வழங்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## நிவாரணப் பொருள்களுடன் மேலுமொரு இந்திய விமானம்

கொழும்பு, டிசெ.2
இயற்கை இடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணப் பொருள்களுடன் இந்திய விமானப் படையின் விமானம் ஒன்று நேற்றுமுன்தினம் மாலை இலங்கை வந்துள்ளது. இந்த விமானத்தில் பேரிடர் பாதிப்புப் பகுதிகள் மற்றும் தொலைதூர இடங்களுக்கு விரைவாக கொண்டு செல்லக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்ட, தன்னிறைவு பெற்ற தொகுதி மருத்துவப் பிரிவுகளும் (BHISHM க்யூப்) மருத்துவக் குழுக்களும் வந்துள்ளன. BHISHM க்யூப் அவசர மருத்துவ சேவைகள், காயச்சிகிச்சை, அடிப்படை அறுவை சிகிச்சை, உயிர்காப்பு வசதிகள் போன்றவற்றை வழங்கக்கூடியது. இவை உடனடி மனிதாபிமான மற்றும் மீட்பு நடவடிக்கைகளுக்கு பெரிதும் உதவக்கூடியன. விமானத்தில் வந்துள்ள இந்திய விமானப்படை மருத்துவக் குழு, BHISHM க்யூப்களின் செயற்பாடு மற்றும் பயன்படுத்தும் முறை தொடர்பாக இலங்கை மருத்துவ நிபுணர்களுக்கு பயிற்சி வழங்கவுள்ளது. பயிற்சி மற்றும் மீட்புப் பணிகள் முடிந்த பின்னர், இந்த இரண்டு BHISHM க்யூப்களும் அதிகாரபூர்வமாக இலங்கைக்கு வழங்கப்படவுள்ளன. (எ-இ)







## ரணகளக் கிளுகிளுப்பால போன உயிர்

இப்ப ஒரு பதினைஞ்சு வருசத்துக்கு முன்னம், ஆமியின்ர ஹெலியோ, பிளேனோ விழுந்திட்டுது எண்டால் எங்களுக்கு அது திருவிழா மாதிரிப் பெரிய கொண்டாட்டம். அந்தளவுக்கு உந்தக் ஹெலியாலையும், பிளேனாலையாலும் நாங்கள் பட்டபாடு கொஞ்சநஞ்சமில்லை. ஆமி வர ஏலாத இடங்களிலயெல்லாம் ஹெலி, பொம்மர், சுப்பர் சொனிக், கிபிர் எண்டு உதுகள் போட்ட குண்டுகளாலதான் ஆயிரக்கணக்கான சனங்கள் செத்தவை. வானத்தில எங்கையாவது ஹெலிச்சத்தம், பிளேன்சத்தம் கேட்டாலே எல்லாருக்கும் மரணபயம் வந்திடும். யமன்ர வாகன மாத்தான் நாங்கள் உதுகளைப் பார்த்தம். அந்தளவுக்கு ஹெலியளும், பிளேன்களும் செய்த அழிவுகள் அப்பிடி இன்னும் நெஞ்சில பதிஞ்சுபோய்க் கிடக்கு. ஆனால் முதல்முறையா ஆமிக்காரரின்ர ஹெலி விழுந்ததுக்கு இந்தமுறைதான் தமிழாக்களும் கவலைப்பட்டிருக்கினம். ஏனெண்டால் இந்தக் ஹெலி எங்களுக்குச்செய்தமாதிரி ஆக்களை அழிக்கப்போகாமல், காப்பாத்தப் போன இடத்தில விழுந்திருக்கு.

இந்தக் ஹெலி விழுந்ததுக்கு அங்க நிண்ட சனங்கள்தான் காரணம் எண்டு சொல்லுப்படுகுது. வெள்ளத்தில மாட்டுப்பட்ட சனங்களை மீட்கவெண்டு வெளிக்கிட்ட இந்தக் ஹெலி கனநேரம் பறந்ததாலையோ என்னவோ இடையில பிழைப்பட்டுப் போட்டுது. அப்ப உடனடியா எங்கையாவது தரையிறக்கினாத்தான் ஹெலியையும் காப்பாத்தமுடியும், அதில இருக்கிறவையும் உயிர்தப்ப முடியும். அந்தக் ஹெலியை ஓடின விமானி, அதை இறக்கிறதுக்கு நல்ல இடமாத் தேடேக்க, ஒரு சந்தி தென்பட்டிருக்கு. ஹெலி ஈர நிலத்துக்க இறங்கேலாது. இறங்கினால் அது தாண்டு சரிஞ்சு விழ வேண்டியதுதான். அதாலதான் காப்பெற் றோட்டில இறக்கினால் நிலம் பலப்பா இருக்குமெண்டு அந்த இடத்தை விமானி செலக்ட் பண்ணிப் போட்டு, இறங்கிறதுக்காக பதிஞ்சு வந்து வட்டமடிச்சிருக்கிறார். ஆனால் சனத்துக்கு ஹெலியின்ர நிலைமை விளங்கேலை. அவைக்கு ஹெலி கீழ பதிஞ்சு வட்டமடிக்கிறது நல்ல முசுப்பாத்தியா இருந்திருக்கு.

உடனேயே எல்லாரும் அந்தச் சந்தியில குவிஞ்சு நிண்டு கையில போனைத் தூக்கிப் பிடிச்சுக்கொண்டு, வீடியோ எடுக்கவெளிக்கிட்டிருக்கினம். விமானிக்குப் பெரும் இக்கட்டாப் போட்டுது. சனம் நிக்கிற சந்தியில ஹெலியை இறக்கேலாது, அப்பிடி இறக்கினால் அங்க குவிஞ்சு நிக்கிற சனத்துக்குப் பாதிப்பு வரும். கீழ நிக்கிறவையை அப்புறப்படுத்தினாத்தான் ஹெலி இறங்கலாம். ஆனால் அந்த நேரத்தில அவையை அப்புறப்படுத்தவும் அங்க ஆரும் இல்லை. ஹெலி பதியப் பதிய சனம் வேடிக்கை பார்க்க இன்னும்கூட வருகுதுகளே தவிர அங்கால ஒதுங்கி நிக்கிறமாதிரி இல்லை. அதால விமானி, 'இதில நிண்டால் வேலைக்கு ஆகாது' எண்டு நினைச்சுக் கொண்டு அங்கால கொஞ்சம் தள்ளி உள்ள ஆத்தில ஹெலியை இறக்கியிருக்கிறார். அப்ப ஹெலி ஆத்துத் தண்ணிக்குள்ள மூழ்கிட்டுது. பிறகுதான் மூழ்கினவையை நேவி வந்து காப்பாத்தினது. சந்தியில சனம் கொஞ்சம் விலகி இடம் குடுத்திருந்தால் ஹெலியும் விழுந்திருக்காது, விமானியும் செத்திருக்கமாட்டார். ரணகளத்திலையும் சனம் கிளுகிளுப்புத் தேடி ஹெலியை வீடியோ எடுக்க வெளிக்கிட்டதால, ஆபத்பாந்தவனா வந்த ஹெலியை ஆபத்தில தள்ளினதுதான் மிச்சம் கண்டியளோ.

padsi@uthayan.com
-பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும், தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்துவிடுவீர்கள். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்ப விஷயமாக சற்று அலைச்சலும் செலவுகளும் ஏற்படும்.

**இடபம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு நண்பர்களிடம் எதிர்பார்த்த பணம் கிடைக்க வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடி முடியும். உறவினர் மூலம் மகிழ்ச்சிதரும் செய்தி கிடைக்கும்.

**மிதுனம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். சகோதரவகையில் சுபச்செலவுகள் ஏற்படக் கூடும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**கடகம்:** இன்று உற்சாகமாகக் காணப்படுவீர்கள். உறவினர்கள்மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கக்கூடும். சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படும். தாய்வழி உறவுகளால் நன்மை உண்டாகும்.

**சிம்மம்:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டியது அவசியம். புதிய முயற்சியைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வீண்மனஸ்தாபம்ஏற்படும்என்பதால், வார்த்தைகளில் நிதானம் தேவை.

**கன்னி:** தந்தைவழி உறவுகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். நண்பர்களிடம் எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படும்.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். தந்தைவழி உறவினர்களுக்காக செலவு செய்ய வேண்டிவரும். சிலருக்குத் தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும்.

**விருச்சிகம்** : தெய்வ அனுக்கிரகம் நிறைந்த நாள். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். ஆனால், திடீர்ச்செலவுகளால் கையிருப்புக் கரையும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் இணக்கமாக நடந்துகொள்வது நல்லது.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். சிலருக்குத் தாய்வழி உறவினர்களால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக் கூடும். மாலையில் நண்பர்கள்மூலம் கேட்கும் செய்தி உங்களை உற்சாகப்படுத்தும்.

**கும்பம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக செலவு செய்ய வேண்டிவரும். சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள்வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். கணவன்– மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

# மண் மூடிய கிராமம்



**29.11.2025 .**
**நடுநிசி 1.30 மணி.**

○ கலாநிதி றவூப் ஸெய்ன்

ரம்புக்வெல விலானகம என்ற அந்த ஊரே தூக்கத்தில் அயர்ந்து போயிருந்த ஒரு தருணம். சுமார் 50 வீடுகளையும் அதில் உறக்கத்தில் இருந்த 50 குடும்பங்களையும் மரணம் விழுங்கிய துயரத்தை எண்ணிக்கூட பார்க்க முடியாதுள்ளது. இதை எழுதும்போதே கண்கள் பனிக்கின்றன. என்ன நடந்தது?

இந்தக் கிராமத்தின் மக்கள் உறக்கத்தில் உறைந்து போயிருந்த கணம் சுற்றுமுற்றும் இருந்த பாறைகளும் மண்மேடுகளும் அவர்கள் மீது சரிந்து விழும் என அவர்கள் தமது கனவில் கூட கண்டிருக்கமாட்டார்கள். கடும் மழையால் பிடிமானம் இழந்திருந்த மண்மேடுகள் சரிந்து வந்து அவர்களது வீடுகளை முழுவதுமாக விழுங்கிக்கொண்டன. உள்ளே மனிதர்கள், குழந்தைகள், முதியோர்கள், நோயாளர்கள் எல்லோரும்தான்.

நீரில் கசிந்து வீடுகளில் வீழ்ந்த மண்மேடுகள் பெரும் பெரும் வீடுகளைக்கூட முழுமையாக மூடிக் கொண்டன. மக்கள் மூச்சுக்காற்றை மட்டுமன்றி முகவரியைக் கூட இழந்த பரிதாபம் இது. யாரும் உடனடியாகச் சென்று உதவமுடியாதவாறு பாதைகள், சிறு வீதிகள் எல்லாமே சிதைந்து போனது. அதனால் பல மணித்தியாலங்கள் இந்தக் கிராமம் உலகப்பார்வையிலிருந்தே துண்டிக்கப்பட்டது.

இப்போதுதான் மக்கள் அங்கே படையெடுக்கிறார்கள். ஆனால் யாருக்கும் எதுவுமே செய்யமுடியாத நிலை. அந்த இராட்சத மண்சரிவுக்கு முன்னால் அவர்கள் கண்ணீர் மட்டுமே சிந்த முடிகிறது. மீட்புப்படையினர் முழு மூச்சாக முயன்றதில் சுமார் பத்துப்பேரின் உடலங்களை மட்டும் தோண்டியெடுக்க முடிந்தது. அதற்கு மேல் தம்மால் எதுவுமே செய்யமுடியாதென அவர்களும் கையை விரித்துவிட்டனர். எஞ்சியுள்ள உடலங்களைத் தோண்டியெடுக்க என்ன செய்யலாம் என அரசாங்கம் கலந்தாலோசித்து வருவதாகவும் தகவல்.

சுமார் 50 குடும்பங்களைச் சேர்ந்த 200 அல்லது 180 பேரளவில் இந்தக் கிராமத்தில் மண்மேடுகளால் காவுகொள்ளப்பட்டிருக்கலாம் என அனுமானிக்கப்படுகின்றது. காரணம் ஒரு வீட்டில் சுமார் நான்கு பேர் உறங்கியிருந்தாலும் அவர்களது மொத்த எண்ணிக்கை 200. ஆகக்குறைந்தது மூன்றுபேர் என்றாலும் 150 பேர். மண்ணுக்குள் புதையுண்ட உடலங்களைக் காலம் கடத்தித் தோண்டி எடுப்பது மிகவும் சவால் நிறைந்தது.

**இந்தக் கிராமம் எங்கேயுள்ளது?**

ரம்புக்வெல விலானகம கிராமம் அக்குரணை நகரிலிருந்து சுமார் பத்து கிலோமீற்றர் தொலைவில் அன்கும்புர-அளவத்துகொட வீதியில் அமைந்துள்ளது. இது அகுரணை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 590ஆவது கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ளது. இங்கு ஒப்பீட்டளவில் முஸ்லிம்களே அதிகம். சுமார் 400 முஸ்லிம் குடும்பங்கள் உட்பட தமிழ் சிங்கள சமூகத்தையும் உள்ளடக்கியதாக 800 குடும்பங்கள் வசித்து வந்தன. அவர்களில் 50 குடும்பங்களே இந்த வரலாற்றுத் துயரத்தினை எதிர்கொண்டுள்ளன.

மிக ரம்மியமான கிராமம் இது. பல்வேறு வகையான புவியமைப்பைக்கொண்ட (Landscaping) இந்த அழகிய கிராமம் இயற்கையின் மடியில் சயனித்திருந்தது. இப்போது இயற்கையே அந்த அழகிய கிராமத்தை மூடியது போன்ற இதயத்தையே உடைத்துப் போடும் இதுபோன்ற துயரங்களை சகிப்பது சாதாரண மனிதர்களால் முடியாத காரியம்.

இந்த மண்ணில் மூழ்கடிக்கப்பட்ட மக்களை நேரடியாகச் சென்று பார்த்துக்கொண்டிருக்கும் மக்கள் கதறியழும் காட்சிகளைக் காண்கையில், அவர்களது அழுகுரல்களைக் கேட்கையில் கண்கள் பனிக்கின்றன. இதயம் கனக்கின்றது. ■

# இலட்சார்ச்சனை

யாழ்ப்பாணம், டிசெ.2

இணுவில் மருதனார்மடம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில் ஹனுமத் ஜெயந்தி இலட்சார்ச்சனைப் பெருவிழா எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி 20ஆம் திகதி சனிக்கிழமை நிறைவுபெறவுள்ளது.

தினமும் காலை, மாலை அபிஷேகம், பூஜை, அர்ச்சனை, ஹோமம், இசை ஆராதனை என்பன இடம்பெறும். 18ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு இலட்சார்ச்சனைப் பூர்த்தி விழாவும், 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு அபிஷேகமும், காலை 7 மணிக்கு வசந்தமண்டப் பூஜையும், காலை 9 மணிக்குத் தேர்ப்பவனியும், மாலை 4.30 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகமும், பஞ்சமுக அர்ச்சனையும் இடம்பெறும். 20ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு சங்கல்ப்பமும், காலை 10.30 மணிக்கு 108 கலச அபிஷேகமும், காலை 11 மணிக்கு ஆன்மிகவுரையும், மதியம் 12 மணிக்கு சந்தன அலங்காரப் பூஜையும், பிரசாதம் வழங்கலும் இடம்பெறும். (எ-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# டித்வா கற்பித்த பாடம்...!

டித்வா புயல் ஏற்படுத்திய அழிவுகள் மழை நீங்கியும், நீங்காத தூவானம் போன்று தொடர்ச்சியாகப் பதிவாகி வருகின்றன. வடமாகாணத்தின் அனைத்துக் குளங்களுக்கும் நீர்வரத்துத் தொடர்ச்சியாக அதிகரித்துள்ளதால் தாழ்நிலப் பகுதிகளில் வாழும் மக்கள் இன்னமும் நிம்மதிப் பெருமூச்சு விடமுடியாத நிலைமை காணப்படுகின்றது. அத்துடன் நீர் வடிந்தோடும் பகுதிகளில் இருந்து இறந்த நிலையில் கால்நடைகள் மீட்கப்பட்டு வருகின்றன. மலைநாட்டின் நிலைமையோ கவலைக்கிடமாக உள்ளது. ஈரலிப்பான -பிடிமானமற்ற மண் காரணமாக- தொடர்ச்சியாக நிலச்சரிவுகள் ஏற்பட்டு வருகின்றன. இரண்டு மாடி, மூன்று மாடிக் கட்டடங்கள்கூட சீட்டுக்கட்டாகச் சரிந்துவிழும் காட்சிகள் நெஞ்சைக் கனக்கச் செய்கின்றன. இந்த நேரத்தில் நாம் செய்ய வேண்டியதெல்லாம் பாதிக்கப்பட்டோருக்கு இயலுமான உதவிகளைச் செய்வது மட்டுமே.

ஆனால் இப்படியான இக்கட்டான நிலையில், எரிகின்ற வீட்டில் பிடுங்கியது இலாபம் என்பதுபோல் அமைந்துள்ளது சில வர்த்தக நிலையங்களின் செயற்பாடுகள். பாதைகள் தடைப்பட்டுள்ளதைக் காரணம் காட்டி பொருள்களைநிர்ணய விலையை மீறி விற்றுத்தள்ளும் பாவகாரச் செயலும் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளது. இதேவேளை, ஐந்து கிலோ கொள்வனவு செய்யவேண்டிய இடத்தில் 10, 15 கிலோவரை கொள்வனவு செய்து பதுக்கும் 'தான் தப்பும் புத்தியையும்' எம்மவர்கள் கைவிட்ட பாடில்லை. ஆனால், இதற்கு நேரெதிராகவும் ஏராளமான வர்கள் இருக்கவே செய்கின்றனர். மீட்புப் பணிகளையும், உணவு உள்ளிட்ட விநியோகத்தையும் அரசாங்கம்தான் மேற்கொள்ளவேண்டும் என்றில்லை. தன்னார்வலர்களின் செயற்பாடுதான் உண்மையில் நாட்டை அதிவிரைவாக மீட்டுவரும். வெள்ளத்தையும், குளிரையும் பொருட்படுத்தாமல் இளைஞர்களும் தன்னார்வக் குழுவினரும் இரவிரவாக மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். உணவு, உடை, மருத்துவம் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களை அதிவிரைவாகச் சேகரித்து இல்லாதவர்களுக்கு வழங்கி வருகின்றனர். பல பிரதேச செயலகங்கள் இந்தப் பணிகளை அழகாகவும் நேர்த்தியாகவும் ஒருங்கிணைத்து வருகின்றன.

இலங்கைக்கு உலக நாடுகளின் உதவிகள் போக, புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் தனிநபர்களின் உதவிகளும் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. ஆனால், அவை முறையான கட்டமைப்புக்குள் அல்லது ஒழுங்கமைப்புக்குள் உட்பட்டு மக்களைச் சென்றடையவில்லை என்பதே நிதர்சனம். விரல்விட்டு எண்ணிவிட முடியாத அளவுக்குத் தனிநபர்கள் புலம்பெயர் தேசங்களில் இருந்து வெள்ள இடர் நிதி திரட்டி வருகின்றனர். அவர்களின் நோக்கம் நல்லதாக இருந்தாலும் இத்தகைய செயற்பாடுகளால் கடந்த காலங்களில் ஏற் பட்ட சர்ச்சைகள் ஏராளம். எனவே, இவ்வாறாகத் தனித்து நிதிதிரட்டும் செயற்பாடுகளுக்குப் பதிலாக, ஒரு குழுக்கட்டமைப்பின் ஊடாக இந்த விடயம் அணுகப்பட்டிருக்கவேண்டும். வருடாவருடம் வடக்கும் கிழக்கும் வெள்ள இடர்பாட்டை எதிர்கொள்கின்றன. வடக்கு -கிழக்கைச் சேர்ந்த பலர் வெளிநாடுகளில் வசிக்கின்றனர். எனவே, அவர்கள் மூலம் கிடைக்கும் உதவியைத் திரட்டவும் ஒழுங்கமைக்கவும் ஒரு பொதுத்திட்டம் இல்லாமை நிச்சயம் எமக்குப் பின்னடைவும் பெருந்தோல்வியும்தான். இந்த விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தி அதி விரைவாக எமது பிரதிநிதிகள் செயற்பட வேண்டும்.


டித்வா என்பது ஒரு புயல்ல, அதுவொரு பேரனர்த்தம். இந்தப் பேரனர்த்தம் கடந்த பின்னரும் அது விட்டுச் சென்ற பாதிப்புகள் தான் இனிவரும் காலங்களில் நாட்டை ஆட்டுவிக்கப்போகின்றன. எனவே இந்த அனர்த்தத்தின் விளைவுகளை எதிர்கொள்வதில் இனம், மதம், மொழி கடந்து மக்கள் ஒன்றித்துள்ளமை அற்புதமானது. இனவாதமும் மதவாதமும் டித்வாவை விடவும் ஆழமான காயங்களை காலம்காலமாக ஏற்படுத்தி வந்துள்ளன. இந்தப் பேரழிவுடனாவது அந்தக் குரோதங்கள் இந்தத் தீவை விட்டோடினால் டித்வாவும் நல்லதற்கே.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

தீயவனை நண்பனாக்கிக் கொள்வதைவிட
தனிமையை நண்பனாக்கிக் கொள்வது மேல்.

—முகமது நபி —



## அநாவசிய அச்சம் கொண்டு பொருள்களைப் பதுக்காதீர்!

நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை கோரிக்கை

**கொழும்பு, டிசெ.2**

**இயற்கை இடர் நிலைமை காரணமாக மக்கள் தேவையற்ற வகையில் அச்சம் கொள்ளவேண்டாம் என்றும், அதிகளவில் பொருள்களைச் சேகரித்து வைக்கவேண்டிய தேவை இல்லை என்றும் நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை தெரிவித்துள்ளது.**

தேவையற்ற முறையில் பொருள்களைப் பதுக்கிவைப்பதைத் தவிர்த்து, தமக்குத் தேவையான அளவுக்கு மாத்திரம் பொருள்களை கொள்வனவு செய்யவேண்டும் என்றும் நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை பொதுமக்களிடம் கோரியுள்ளது.

சரியான நடைமுறையின்கீழ் மக்களுக்குத் தேவையான பொருள்களின் அளவை மட்டும் வழங்க வேண்டும் என்று சிறப்பு அங்காடிகள் மற்றும் வர்த்தகர்களிடமும் நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை கோரிக்கை விடுத்துள்ளது.

தற்போதுள்ள இடர் நிலைமையில் வழமையான விலைகள் மற்றும் நியாயமான விலைகளின்கீழ் மட்டுமே பொருள்களை விற்பனை செய்து, அரசாங்கத்துக்கும் நாட்டுக்கும் ஆதரவு வழங்கவேண்டும் என்று வர்த்தக சமூகத்திடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (எ-இ)




## ட்ரோன்கள் பறக்கவிடுவதை தவிர்க்குக!

கொழும்பு, நவ.2

இயற்கை இடரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ட்ரோன்களை பறக்கவிடுவதைத் தவிர்க்கவேண்டும் என்று இலங்கை விமானப்படை அறிவுறுத்தியுள்ளது அனைத்து ட்ரோன் புறப்பாடுகள் மற்றும் தரையிறக்கங்கள் பற்றிய தகவல்களை 0112343970, 0112343971 அல்லது 115 அவசர இலக்கத்தின் மூலம் முன்கூட்டியே அறிவிக்க வேண்டும் என்றும் இலங்கை விமானப்படை கேட்டுக்கொண்டுள்ளது. (எ-இ)

## இலங்கை வந்தடைந்தது ஜப்பான் மருத்துவக்குழு



கொழும்பு, டிசெ.2

இலங்கையில் இயற்கை இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படவேண்டிய அவசர மருத்துவ சேவைகள் தொடர்பில் நேரடியாக ஆராய்வதற்காக ஜப்பான் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட சிறப்பு மருத்துவர்கள் குழு நேற்றுமுன்தினம் இலங்கை வந்தடைந்தது.

இவர்கள் இலங்கையின் தற்போதைய மருத்துவ வசதிகள், அவசர சிகிச்சைத் திறன், மருந்து மற்றும் உபகரணங்களின் குறைபாடுகள் போன்றவற்றை மதிப்பாய்வு செய்யவுள்ளனர். இதுதொடர்பான அறிக்கை ஜப்பான் சுகாதார அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப் படவுள்ளது. (எ-இ)

## வதந்திகளைக் கட்டுப்படுத்த கடுமையான நடவடிக்கை

இயற்கைப் பேரிடர் தொடர்பாக பொதுமக்களைப் பயமுறுத்தும் அல்லது தொந்தரவு செய்யும் வகையில் வதந்திகள் அல்லது தவறான அறிக்கையிடல்கள் தொடர்பாக அவசரகால விதிமுறைகளின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படலாம்என்றுஅறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 29ஆம் திகதி ஜனாதிபதி அவசரகால (சிறப்பு ஏற்பாடுகள் மற்றும் அதிகாரங்கள்) விதிமுறைகளை அறிவித்திருந்த நிலையில், வாய்மொழியாகவோ, எழுத்துப்பூர்வ, டிஜிற்றல் அல்லது தகவல் மற்றும் தொடர்புத் தொழில்நுட்பம், தானியங்கி அமைப்புகள் அல்லது செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட வேறு எந்த ஊடகங்கள் மூலமாகவோ தொடர்பு கொள்ளப்பட்ட, வெளியிடப்பட்ட, உருவாக்கப்பட்ட அல்லது பரப்பப்பட்ட எந்தவொரு வதந்தி அல்லது தவறான அறிக்கை தொடர்பாக சட்டம் நடைமுறைப்படுத்தப்படலாம் என்று கூறப்பட்டுள்ளது. ஒரு பொலிஸ் அதிகாரி அல்லது முப்படையினருக்கு இந்தக் குற்றங்களை விசாரிக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் 151 குடும்பங்கள் தங்குமிடங்களில்

யாழ்ப்பாணம், டிசெ.2

வேலணைப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 151 குடும்பங்களைச் சேர்ந்த 447 பேர் பாதுகாப்பான அமைவிடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். கடந்த 28,29,30 ஆம் திகதிகளில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக் கப்பட்ட மக்களே இவ்வாறு தங்கவைக்கப்பட்டுள்ளனர். புங்குடுதீவு வட மத்தி கிராம அலுவலர் பிரிவில் 21 குடும்பங் களைச் சேர்ந்த 21 சிறுவர்கள், கர்ப்பிணித் தாய் ஒருவர், 40 முதியவர்கள் உள்ளடங்கலாக 61 பேர் புங்குடுதீவு மகாவித் தி யாலயத்திலும், சரவணை மேற்குப் பிரிவில் 98 குடும் பங்களைச் சேர்ந்த 67 சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார் இருவர், 199 முதியவர்கள் உள்ளடங்கலாக 266 பேர் சின் னமடு றோமன் கத்தோலிக்க பாடசாலையிலும், வேலணை மத்திய கிழக்குப் பிரிவில் 32 குடும்பங்களைச் சேர்ந்த 35 சிறுவர்கள், 85 முதியவர்கள் உள்ளடங்கலாக 120 பேர் செட்டிப்புலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான சமைத்த உணவு கள் கிராம சேவையாளர் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன என்று பிரதேச செயலகத்தினர் தெரிவித்துள்ளனர். (க-9)

# குருதி வகைகளுக்குத் தட்டுப்பாடு கொடையாளர்களுக்கு அழைப்பு

**யாழ்ப்பாணம், டிசெ.2**

**இடர்காலத்தில் ஏற்படும் விபத்துகள் மற்றும் உயிரிழப்புகளைத் தவிர்க்க மருத்துவமனைகளில் குருதி வகைகளுக்குப் பெரும் தட்டுப் பாடு ஏற்பட்டுள்ளது. எனவே குருதிக்கொடையாளர்கள் அருகிலுள்ள குருதி சேகரிப்பு நிலையங்களுக்குச் சென்று குருதித்தானம் வழங்கி உதவவேண் டும் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை குருதி வங்கிப் பிரிவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.**

சீரற்ற காலநிலை காரணமாக நாடு முழுவதும் குருதித்தான முகாம்கள் நடைபெறவில்லை. அதனால் வழமையான குருதிச் சேகரிப்பு கடுமையாகப் பாதிக் கப்பட்டுள்ளது.

தேசிய குருதி மாற்றுப் பிரயோக சேவையின் பணிப்பாளரின் வேண்டுகோளுக்கமைய மனி தாபிமானமிக்க குருதிக்கொடை யாளர்கள் பலர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்த வங்கிக்கு நேற்றுமுன் தினம் நேரடியாக வருகை தந்து குருதிக்கொடை வழங்கி உயிர் காக்கும் உன்னத பணிக்கு ஒத் துழைப்பு வழங்கினர்.

அதேபோன்று தகுதியுடையவர் கள் குருதிக்கொடை வழங்கி உதவமுடியும்என்றும் அழைப்பு விடுத்துள்ளனர். (க-66)

# நல்லூர் பிரதேச சபை - கொக்குவில்
# வழங்குனர்களை பதிவு செய்தல் - 2026

நல்லூர் பிரதேச சபையானது 2026 ஆம் ஆண்டுக்கான கீழ் குறிப்பிடப்பட்ட பொருட்கள், சேவைகள், வேலைகள், வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குனர்கள், உற்பத்தியாளர்கள், ஒப்பந்தகாரர்கள், வியாபார நிறுவனங்கள், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொகுதி A | பொருட்கள் வழங்குதல் (பொது) |
|---|---|
| A-01 | காகிதாதிகள், எழுதுபொருட்கள், உபகரணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A-02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம் /இரும்பு/ உருக்கு) |
| A-03 | கணனிகள், கணனியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள், நிழல் பிரதியாக்கல் இயந்திரம் , தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோணர்கள், ரிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக இலத்திரனியல் உபகரணங்கள் |
| A-04 | யன்னல் திரைச்சீலைகள் , சீருடை மற்றும் துணிவகைகள் |
| A-05 | குளியலறை பொருத்திகள், மாபிள்கள், நீர் வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A-06 | கட்டட இரும்புப் பொருட்கள், பெயின்ற் வகைகள், வாணிஸ் மற்றும் கட்டுமானப் பொருட்கள், தகரங்கள், கம்பிநெற், கல்வனைஸ் பைப் வகைகளை. |
| A-07 | மின்சாரப் பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின்னிணைப்புக்கான பொருட்கள், மின் மோட்டர்கள், மின்சார பல்ப்புகள், மின் விசிறிகள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A-08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனைய பொருட்கள் |
| A-09 | சுத்திகரிப்பு திரவங்கள், சுத்திகரிப்பு பொருட்கள், கிருமி நாசினிகள் மற்றும் ஏனையவை. |
| A-10 | வாகன உதிரிப்பாகங்கள், துணைபொருட்கள், பற்றி, ரயர், ரியூப் மற்றும் ஏனையவை |
| A-11 | தோல் உற்பத்திப் பொருட்கள் |
| A-12 | எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் |
| A-13 | நூலகங்களுக்கான நூல்கள், சஞ்சிகைகள் |
| A-14 | கற்கள், மண் வகைகள், தார் |
| A-15 | தீராந்திகள், பலகைகள், சட்டங்கள், பனை மரங்கள், சலாகைகள், கம்பஸ் மரம், ஏனைய பலகைகள். |
| A-16 | அலங்காரப் பொருட்கள், அலுமினியப் பொருட்கள், பிளாஸ்ரிக் பொருட்கள், பரிசுப்பொருட்கள், சில்வர் பொருட்கள், மற்றும் அதனுடன் தொடர்புடைய வேலைகள். |
| A-17 | இரும்புப் பொருட்கள், வேலைத்தள உபகரணங்கள். அதனுடன் தொடர்புடைய பொருட்கள். |
| A-18 | பாதணிகள், மழைக்கவசம், கையுறை, முகக்கவசம். |
| A-19 | இலத்திரனியல் சாதனங்கள், துணைப்பொருட்கள் |
| A-20 | அலுமினிய பிற்றிங் மற்றும் அதனோடிணைந்த் பொருட்கள் |
| A-21 | மரக்கன்றுகள், மரம் நாற்றுக்கள் மற்றும் தொடர்புடைய பொருட்கள் |
| A-22 | பிளாஸ்ரிக் / பைபர்கிளாசில் அமைந்த பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், உபரணங்கள் மற்றும் தொடர்புடைய பொருட்கள். |
| **தொகுதி B** | **சேவைகள்/ வேலைகள்** |
| B-01 | மரத்தளபாடங்கள் உருக்கு தளபாடங்கள் திருத்தம் |
| B-02 | ஒலியமைப்பு சாதனங்களும் அதனோடு தொடர்புடைய உபகரணங்களும், தொழில் நுட்ப ஆலோசனை வழங்கலும், திருத்தம் செய்தலும். |
| B-03 | மின்சாரப் பொருட்கள், மின் மோட்டர்கள், மின்விசிறிகள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் திருத்தம், சேவிஸ் செய்தல். |
| B-04 | மின்பிறப்பாக்கி, இலத்திரனியல் சாதனங்கள், துணை பொருட்கள் திருத்தம், சேவிஸ் செய்தல். |
| B-05 | இறப்பர் முத்திரை வகைகளை தயாரித்து வழங்கல் |
| B-06 | கோலவுடை தைத்தல், கோலவுடை வழங்குதல் |
| B-07 | சுத்திகரிப்பு சேவையும் பாதுகாப்பு சேவையும் |
| B-08 | கணனி, பிறின்ரர் அதனுடன் இணைந்த பொருட்கள், நிழல் பிரதியாக்கல் இயந்திரம், தொலைநகல் இயந்திரம், விரல் அடையாளத்தை பதிவு செய்யும் இயந்திரம் திருத்தமும் பராமரிப்பு செய்தலும் |
| B-09 | பதிப்பக வேலை - சகலவித படிவங்களும் அச்சிடலும் புத்தகங்கள் கட்டுதலும் |
| B-10 | பனர், ஸ்ரிக்கர், விளம்பரப் பலகை, லெமினேற்றிங், போட்டோபிறேம் மற்றும் தொடர்பான சேவைகள். |
| B-11 | இரும்பு, கம்பிநெற், பிற்றிங் வகைகள், அலுமினிய பிற்றிங்குகள் தொடர்பான சேவைகள். |
| B-12 | பிளாஸ்ரிக் / பைபர்கிளாசில் அமைந்த பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், உபரணங்கள் மற்றும் தொடர்புடைய பொருட்கள் திருத்தம். |
| B-13 | வளிச் சீராக்கிகள், குளிரூட்டிகள், குளிர்சாதனப் பெட்டிகள் திருத்தமும் பராமரிப்பு செய்தலும். |
| B-14 | கனரக வாகனங்கள் (JCB, Tipper, Excavator, Bulldozer) வாடகைக்கு பெற்றுக்கொள்ளல். |
| **தொகுதி C** | **வாகன திருத்தமும் சுத்திகரிப்புச் செய்தலும்** |
| C-01 | சகல விதமான வாகன திருத்தமும், வாகன சுத்திகரிப்பு /உராய்வு நீக்கிகள், எஞ்சின் ஒயில், சீற் குசன் வேலை. |
| C-02 | வாகனங்களுக்குரிய ரயர், ரியூப் ஒட்டுதல், உலோக வேலைகள் |
| C-03 | உழவு இயந்திரம், உழவு இயந்திரப் பெட்டி திருத்தம், குடிநீர் தாங்கி திருத்தம். |
| C-05 | நீர் இறைக்கும் இயந்திரம், நீர் இறைக்கும் மோட்டார் திருத்தம் |
| C-06 | மோட்டார் சைக்கிள் திருத்தம், சுத்திரிகரிப்பு |
| **தொகுதி D** | **ஒப்பந்த வேலைகள்** |
| D-01 | கட்டட நிர்மாணமும் திருத்தமும் |
| D-02 | வீதி நிர்மாணமும் திருத்தமும் |
| D-03 | கிணறு /குழாய்க்கிணறு அமைத்தல் |
| D-04 | வர்ணம் பூசுதல். |
| **தொகுதி E** | **உணவு வகைகள்** |
| E-01 | சமைத்த உணவு, சிற்றுண்டி, கேக் வகைகள் |
| E-02 | குளிர்பான வகைகள், குடிநீர்போத்தல்கள் |
| E-03 | உலர் உணவுப்பொருட்கள், மற்றும் அதனுடன் இணைந்தபொருட்கள். |

## நியந்தனைகள்


1. பதிவு செய்து கொள்ளும் அனைத்து வழங்குனர்களும்
   - வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதி.
   - 2025 ஆம் ஆண்டு பெறப்பட்ட மாநகர / நகர / பிரதேச சபை வரிப்பதிவுச் சான்றிதழின் பிரதி ஆகியவற்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
2. நிர்மாணதாரர்கள் ICTAD புத்தகத்தின் முற்பக்கம் மற்றும் பதிவு / புதுப்பித்தல் பக்க பிரதியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. ஒவ்வொரு தொகுதியினதும் தொடர் இலக்கம் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி விண்ணப்ப படிவங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
4. விண்ணப்ப படிவங்களை எமது தலைமை அலுவலகத்தில் கீழ்வரும் கட்டணத்தை செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
   - தொகுதி A, B, C, E ஆகியவற்றின் தொகுதிகளில் ஒவ்வொன்றுக்கும் ரூபா.500.00 (VAT நீங்கலாக)
   - தொகுதி D க்கு ரூபா.2,000.00 (VAT நீங்கலாக)

   தொகுதி D இல் D-01, D-02 ஆகியவற்றுக்கு CIDA நிறுவனத்தில் பதிவு செய்த C9, C8, C7 நிர்மாணதாரர்களே பதிவு செய்ய முடியும்.
5. அனைத்து விண்ணப்ப படிவங்களையும் ஒரு கடித உறையிலிட்டு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"வழங்குனர்களை பதிவு செய்தல் - 2026"** எனக் குறிப்பிட்டு **தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்** என்னும் முகவரிக்கு 31.12.2025 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
6. தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் பதிவு செய்து கொண்டுள்ள வழங்குனர்களிடம் இருந்து விலை மனுக்கள் கோரப்படும் என்பதுடன், இதற்கு புறம்பான வழங்குனர் களிடமிருந்தும் விலை மனுக்களை கோருதல், கொள்வனவு செய்யும் உரிமை, வேறு பெறுகைச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் உரிமை சபையைச் சார்ந்தது.
7. திருப்திகரமற்ற வழங்கல்கள் / சேவைகளை நிராகரிக்கும் உரிமை சபைக்கு உண்டு.
8. மேலதிக விபரங்களை நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ (021 222 2700) அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**ப.மயூரன்**
**தவிசாளர்,**
**நல்லூர் பிரதேச சபை,**
**கொக்குவில்**

**02.12.2025**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஊர்காவற்றுறை – காரைநகருக்கான போக்குவரத்துக்குப் பயன்படுத்தும் கடல் பாதைத் துறைமுகம் மற்றும் வீதி என்பன சீரற்ற கால நிலை காரணமாக கடலிலிருந்து வந்த மணல் மற்றும் குப்பைகளினால் சேறும் சகதியாகவும் காணப்பட்டது. ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தவிசாளர், உபதவிசாளர், சபையின் செயலாளர் மற்றும் பணியாளர்கள், பொதுமக்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் அவை நேற்றுத் திங்கட்கிழமை அகற்றப்பட்டன. (எ–41–9)

# நீரில் மூழ்கிய படகுகளை மீட்க சிரமப்படும் மன்னார் மீனவர்கள்

மன்னார், டிசெ.2

டித்வா புயலால் ஏற்பட்ட தாக்கம் குறைவடைந்துள்ள நிலையில், மன்னாரில் நீரில் மூழ்கிய மீன்பிடிப்படகு களை மீட்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. எனினும் படகுகளை மீட்பதில் மீனவர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர். மன்னார் பிரதான பாலம் மற்றும் கோந்தை பிட்டிக் கடற்கரைப் பகுதிகளில் தரித்துவைக்கப் பட்ட ரோலர் மீன்பிடிப் படகுகள்பல புயலின் தாக்கத்தால் நீரில் மூழ்கியுள்ளன. அவற்றை உள்ளூர் மீனவர்கள் மற்றும் ரோலர் உரிமையாளர்கள் இணைந்து மீட்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

மன்னார் பிரதான பாலத்தின் ஆழமான பகுதியில் நான்கு ரோலர் படகுகள் முழுமையாக மூழ்கியிருப்ப தால், மீட்கும் பணி வெற்றிகரமாக அமையவில்லை. ஆயினும் தொடர்ச்சியாக மீனவர்களின் உதவியுடன் படகுகளை மீட்கும் பணி இடம்பெற்று வருகின்றது. மூழ்கியுள்ள ரோலர் படகுகள் பல இலட்சம் பெறுமதியானவையென்றுமீனவர்கள் தெரிவித்துள்ளனர். (க–56)

## மரண அறிவித்தல்



### தவீந்திரதாஸ் பத்மாவதி

யாழ். அச்சுவேலி காளிகோவிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தவீந்திரதாஸ் பத்மாவதி அவர்கள் நேற்று (01.12.2025) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் தவீந்திரதாஸ் (பொலிஸர்) அவர்களின் மனைவியும், காலஞ்சென்ற கலைச்செல்வி மற்றும் கிரிசாந்தன், கிரிசானி ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற அர்ச்சுன் மற்றும் பிரசாந்தினி ஆகியோரின் மாமியும், டினுசன், சஞ்சனா ஆகியோரின் பேர்த்தியும், பாக்கியலச்சுமி, Dr. சிவபாலன், சர்வேஸ்வரன் (Surveyor), தாட்சாயினி, குகதாசன் (கனடா), சிறீஸ்கந்தராஜா (இந்தியா), ஞானகி (பிரான்ஸ்), மல்லிகா (கனடா) ஆகியோரின் சகோதரியும், கவீந்திரதாஸ் (முன்னாள் GM - MPCS, வலிகிழக்கு), ரவீந்திரதாஸ் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02-12-2025) செவ்வாய்க்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி முழங்கன் இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 005 0344

காளிகோவிலடி,
அச்சுவேலி. (CS/60050) J-1

## 2026ம் ஆண்டிற்கான வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல்

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையானது 2026ஆம் ஆண்டிற்கான கீழ் குறிப்பிடப்பட்ட வழங்குபொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்கள். உற்பத்தியாளர்கள், ஒப்பந்தகாரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள். வியாபார நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது. விண்ணப்பப் படிவங்களை எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் யாவும் 30.12.2025ஆம் திகதி வரை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

தொகுதிகள்
தொகுதி "A" - பொருட்கள் வழங்குதல் (பொது)
தொகுதி "B" - சேவைகள் ஃ வேலை
தொகுதி "C" - வாகனத் திருத்தமும் சேவிஸ் செய்தலும்

| தொ.இல | பொருட்கள் வழங்குதல் (பொது) |
|---|---|
| A - 01 | அனைத்து காகிதாதிகள் எழுதுபொருட்கள் உபகரணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A – 02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம்/இரும்பு/உருக்கு) |
| A – 03 | கணனிகள், கணனியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள் தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோணர்கள், ரிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக மின் உபகரணங்கள் |
| A – 04 | யன்னல் திரைச்சிலைகள், சீருடை மற்றும் துணிவகைகள் |
| A – 05 | குளியலறை பொருத்திகள், மாபிள் கல் வகைகள், நீர் வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A – 06 | கட்டிட இரும்புப்பொருட்கள், தீந்தைகள் வாணிஸ் மற்றும் இரும்பு பொருட்கள் |
| A – 07 | மின்சார பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின்னிணைப்புக்கான பொருட்கள், மின் மோட்டார்கள், மின்சார பல்புகள், மின்விசிறிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A – 08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை |
| A - 09 | அழுக்கு நீக்கும் பவுடர்கள், திரவங்கள் மற்றும் கிருமிநாசினிகள் ஏனையவை |
| A - 10 | வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள், டயர், ரியூப் மற்றும் ஏனையவை |
| A - 11 | தோல் உற்பத்திப்பொருட்கள், தொழிலாளர்களுக்கான நீளச்சப்பாத்துக்கள் |
| A - 12 | எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் |
| A - 13 | நூலகங்களுக்கான நூல்கள் |
| A - 14 | இரும்புப் பொருட்கள் |
| A - 15 | கற்கள், மணவகைகள் |
| A - 16 | தீராந்திகள், பலகைகள், சட்டங்கள் |
| A - 17 | பனைமரங்கள், சலாகைகள் |
| A - 18 | பாதணிகள், தோல்ப்பொருட்கள் |
| A - 19 | அலங்காரப்பொருட்கள் |
| A - 20 | இலத்திரனியல் சாதனங்கள், துணைப்பொருட்கள் |

| தொ.இல | சேவைகள் / வேலை |
|---|---|
| B - 01 | ஒலியமைப்பு சாதனங்களும் அதனோடு தொடர்புடைய உபகரணங்களும் தொழில்நுட்ப ஆலோசனை வழங்கலும் |
| B – 02 | உருக்கு, மரத்தளபாடங்கள் திருத்தம் |
| B – 03 | மின் உபகரணங்கள் திருத்தம், சேவிஸ் செய்தல் (மின் விசிறி, தொலைநகல், நிழற்பட பிரதி இயந்திரம், கணனி, விரல் அடையாளத்தை பதிவுசெய்யும் இயந்திரம்) |
| B – 04 | மின் மோட்டார்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்தலும் மீளமுறுக்குதலும் |
| B – 05 | பதிப்பக வேலை சகலவித படிவங்கள், அச்சிடுதல், பெயர்ப்பலகை, பனர்கள் ஞாபகார்த்த பலகை தயாரித்தல் ஏனையவை |
| B – 06 | கட்டிட அமைப்பும் திருத்தவேலைகளும், வீதி அமைத்தலும் புனரமைத்தலும் |
| B – 07 | உள்ளகத் தொலைபேசி வலையமைப்பு, இணைய வசதி வழங்கல் மற்றும் பராமரிப்பும் |
| B – 08 | இலத்திரனியல் சாதனங்கள் திருத்தல் |
| B - 09 | கோலவுடை தைத்தல் |
| B - 10 | இறப்பர் முத்திரை வகைகளைத் தயாரித்து வழங்கல் |
| B - 11 | சுத்திகரிப்புச் சேவையும் பாதுகாப்புச் சேவையும் |
| B - 12 | வளிச்சீராக்கி திருத்தம், சேவிஸ் செய்தல் |

| தொ.இல | வாகனத்திருத்தமும் சேவிஸ் செய்தலும் |
|---|---|
| C - 01 | சகல விதமான வாகன திருத்தமும், மின்சார வேலை, வாகன உட்பக்கம் சீற் என்பவற்றிற்கான குசன் வேலைகள் |
| C – 02 | சகலவிதமான வாகன சுத்திகரிப்பு |
| C – 03 | வாகனங்களுக்குரிய ரியூப் ஒட்டுதல், உலோக வேலைகள் |

நிபந்தனைகள்


1. அனைத்து விண்ணப்பதாரர்களும் பதிவு செய்து கொள்ள விரும்பும் ஒவ்வொரு தொகுதிக்குமாக வெவ்வேறு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதுடன் விண்ணப்பங்களுக்காக மீளளிக்கப்படாத பதிவுக்கட்டணமாக ரூபா 1இ000.00 வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, யாழ் வீதி, மானிப்பாய் என்ற முகவரியில் உள்ள எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப.3.00 மணி வரை நேரடியாகச் செலுத்தி விண்ணப்பப் படிவங்களை பெற்று பூரணப்படுத்தி பற்றுச்சீட்டுடன் அனுப்புதல் வேண்டும்.
2. விண்ணப்பங்களை அனுப்பும் போது தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் - 2026 எனக் குறிப்பிட்டு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, யாழ் வீதி, மானிப்பாய் என்ற முகவரிக்கு 30.12.2025ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.
3. வழங்கல் / சேவைகள் 2026ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
4. பதிவிற்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்களில் திருப்திகரமற்ற வழங்கல்கள் Æ சேவைகளை நிராகரிக்கும் உரிமை சபையின் தவிசாளருக்கு உண்டு.
5. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் நேரடியாகவோ அல்லது 021 225 6650 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

தவிசாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

01.12.2025

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 28 . 10 . 1937

மறைவு 01 . 12 . 2025

## ஐயாத்தம்பி வயிரமுத்து

( ஓய்வு பெற்ற பிரதேச சபை செயலாளர் சாவகச்சேரி)

சிவன்கோவில் வீதி, சந்திரபுரம் மட்டுவிலை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்தம்பி வயிரமுத்து (ஓய்வு பெற்ற பிரதேச சபை செயலாளர் சாவகச்சேரி) அவர்கள் நேற்று (01.12.2025) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்தம்பி - தில்லைநாயகம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிவபாக்கியம் (ஆசிரியை) அவர்களின் அன்புக்கணவரும், ஞானச்சந்திரன் (சிரேஷ்ட தாதிய உத்தியோகத்தர் போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்), ஞானசக்தி (அதிபர் - கொ/ குமர உதயம் தமிழ் வித்தியாலயம்), காலஞ்சென்ற ஞானகௌரி (ஆசிரியை), மற்றும் ஞானபாஸ்கரன் (பண்ணை முகாமையாளர் -மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் திருநெல்வேலி) ஆகியோரின் அன்புத் தந்தையும், மலர்விழி (பிரதம தாதிய பரிபாலகி - போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்), ருஷ்சிவா (Operation Executive - Sea care PVT.LTD), ஹேமகலா ( முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - விவசாய அமைச்சு வடமாகாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கஜானன், யாதவி, சங்கவி, சாம்பவி ஆகியோரின் அன்புப் பேரனும், ஆச்சிப்பிள்ளை, காலஞ்சென்ற சந்திரசேகரம் மற்றும் செல்லம்மா, வன்னியசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான ஆச்சிப்பிள்ளை, சபாபதிப்பிள்ளை, கார்த்திகேசு, கமலாவதி, இராசசிங்கம் மற்றும் இராசநாயகம் (விசுவமடு), காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் புஸ்பராணி, இரத்தினம், கலைவாணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2025) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சிவன்கோவில் வீதி,
சந்திரபுரம், மட்டுவில்.

தகவல்:
குடும்பத்தினர்

(CR/46580) J-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 11 . 01 . 1989

மறைவு 28 . 11 . 2025

## தணிகாசலம் பத்மநிகேதன்

**Relationship Manager**
**Nations Trust Bank PLC - Jaffna Branch**


கனகராயன்குளம் வவுனியாவைப் பிறப்பிடமாகவும், GPS வீதி, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட தணிகாசலம் பத்மநிகேதன் அவர்கள் கடந்த 28.11.2025 அன்று அகாலமரணமடைந்தார்.
அன்னார் தணிகாசலம் - பிரபாவதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்ற சரவணமுத்து யோகலக்ஷ்மி தம்பதியரின் அன்பு மருமகனும், பிரியாவின் (St.John's College, Jaffna) பாசமிகு கணவரும், பத்மவிபூஷன், பத்மசொரூபன், பத்மசுலக்ஷன் ஆகியோரின் சகோதரனும், நவநீதன், நிருபா, யசீகரன், தாரகா, பிராந்தகி, சண்முகி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதி அஞ்சலி இன்று (02.12.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கம் செய்வதற்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பிரியா (மனைவி) - 077 991 6893
விபூஷன் (சகோதரன்) - 077 640 3113
2ஆம் ஒழுங்கை, GPS வீதி, கல்வியங்காடு.

தகவல்
குடும்பத்தினர்

(CR/46607) A

# மரண அறிவித்தல்



தோற்றம் 31 . 03 . 1961

மறைவு 28 . 11 . 2025

## நல்லையா சந்திரகுமார் (குமார்)

ஆனந்தா வீதி, மானிப்பாயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா சந்திரகுமார் (குமார்) அவர்கள் கடந்த (28.11.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா - மனோன்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சிவனேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், லக்கீசன் அவர்களின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான நவநீதமலர், சிவகடாட்சம் மற்றும் ரஞ்சனகுமார், காலஞ்சென்ற கிருஷ்ணகுமார் மற்றும் சிவகுமாரி (கனடா), காலஞ்சென்ற ஜெயக்குமார் (சிறி), மற்றும் வேல்குமார், நீலாம்பிகை (இந்தோனேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நாளை (03.12.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆனந்தா வீதி,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS/30832) J-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 15 . 09 . 1970

மறைவு 30 . 11 . 2025

## நவராணி சோதிநாதன்

கரப்பிட்டியந்தனை, களபூமி காரைநகரை பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணை 59 சிவப்பிரகாசம் வீதியை வதிவிடமாகவும் கொண்ட நவராணி சோதிநாதன் அவர்கள் நேற்று முன்தினம் (30.11.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சுந்தரம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பரஞ்சோதி - சிவயோகம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சோதிநாதனின் அன்பு மனைவியும், கம்சன் (LOLC), ரமணன் (BSc), உசாந்தினி (BBM) அகியோரின் அன்புத் தாயாரும், நாகராசா, நாகபூசணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், உமாதேவி, காலஞ்சென்றவர்களான மகாதேவன், உருத்திரமூர்த்தி மற்றும் வேதநாயகி (வனிதா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (02.11.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

59, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(CS/60054) J-1

077 687 8535, 075 718 9042

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்
17 . 11 . 1939

மறைவு
05 . 11 . 2025

கடந்த 05.11.2025 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

## திருமதி. வயிரமுத்து செங்கமலம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 03.12.2025 புதன்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனிதத் தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 05.12.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக அன்புடன் ஏற்றுக்கொள்ளவும்)

குருவீதி,
காங்கேசன்துறை

குடும்பத்தினர்
077 912 2657, 077 904 1768

(CS 60047) E


# வலிகாமம் கிழக்கில் வாழைகள் அழிந்தன

யாழ்ப்பாணம், டிசெ. 2

டித்வா புயலின் தாக்கம் காரண மாக, வலிகாமம் கிழக்குப் பகுதி யில் வாழைச் செய்கை முற்றாக அழிவடைந்துள்ளது என்று செய் கையாளர்கள் கவலை தெரிவித் துள்ளனர். கடந்த பல வருடங்க ளின் பின்னர், வாழைச் செய்கை யில் ஏற்பட்ட பேரழிவாக இது அமைந்துள்ளது என்றும் அவர் கள் கூறியுள்ளனர்.

(ம-41,17)


# விண்ணக வாழ்வில் இறைவனுடன்

40 ஆம் ஆண்டு



அமரர்
முருகப்பர் கந்தையா

மண்ணில் 16.12.1921
விண்ணில் 03.09.1985
திதி : ஆவணி அபரபக்க சதுர்த்தி

(நெடுந்தீவு மேற்கு)

09 ஆம் ஆண்டு



அமரர்
காமாட்சி கந்தையா

மண்ணில் 15.07.1931
விண்ணில் 10.12.2016
திதி : கார்த்திகை பூர்வபக்க துவாதசி

கண்முன்னே வாழ்ந்த காலம், கனவாகிப் போனாலும்
எங்கள்முன்னே உங்கள் முகம், எந்நாளும் உயிர்வாழும்
மண்விட்டு மறைந்து நீங்கள் விண்நோக்கிச் சென்றாலும்
கண்விட்டு மறையாமல், கனகாலம் இருப்பீர்கள்.


உயரப்புலம்
ஆனைக்கோட்டை

என்றும் உங்கள்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(CS 60051) E



# முதலாம் ஆண்டு நினைவுதின அழைப்பு



தோற்றம்
05 . 01 . 1963

மறைவு
12 . 12 . 2024

கடந்த 12.12.2024 வியாழக்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் சின்னத்தம்பி பரஞ்சோதி

(உரிமையாளர் - சோதி ஸ்ருடியோ)

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுப் பிரார்த்தனை இன்று (02.12.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஏழாலை மேற்கு,
ஏழாலை.

குடும்பத்தினர்
சோதி ஸ்ருடியோ
077 [illegible] 9657
077 659 2346

(CS/60048) J-1



# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலியும் 21 ஆவது பிறந்த தினமும்

மலர்வு
12.02.2004

உதிர்வு
13.12.2022



## சுரேந்திரன் காருஷன்

திதி: அபரபட்ச பஞ்சமி





பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் உற்றார், உறவினர்,
நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மை விட்டுப்பிரிந்து
ஆண்டுகள் மூன்று மறைந்ததையா
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்
உம்மை ஆண்டவன் அழைத்தான்
என் செய்வோம் இறைவன் சித்தம் இது
இனிக் காணமுடியாத சோகநிலையோடு இங்கிருந்தே ஏங்கி அழுகின்றோம் - மகனே!
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.


அன்னாரின் ஆத்மா சாந்திப்பிரார்த்தனை இன்று (02.12.2025) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறுகின்றது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

[illegible]

பிரிவால் துயருற்றிருக்கும்
அம்மா, அப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழில் அனர்த்த தணிப்புக்கு ரூ.1.55 மில்லியன் நிதி ஒதுக்கீடு!

யாழ்ப்பாணம், டிசெ. 2

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஏற்பட்ட அனர்த்த நிவாரணங்களுக்கு 1.55 மில்லியன் ரூபா நிதியொதுக்கீடு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்டச் செயலகம் அறிவித்துள்ளது.

அதன்படி யாழ்ப்பாணத்துக்கு 26,000 ரூபாவும் தென்மராட்சிக்கு 3 இலட்சத்து 57,500 ரூபாவும் காரைநகர் பிரதேசத்துக்கு 4 இலட்சத்து 87 ஆயிரத்து 500 ரூபாவும் பருத்தித்துறைக்கு ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ரூபாவும் வேலணைப் பிரதேசத்துக்கு ஒரு இலட்சத்து 750 ரூபாவும் சண்டிலிப்பாய் பிரதேசத்துக்கு 52 ஆயிரம் ரூபாவும் கோப்பாய்க்கு 2 இலட்சத்து 73 ஆயிரம் ரூபாவும் சங்கானைப் பிரதேசத்துக்கு 19 ஆயிரத்து 500 ரூபாவும் ஊர்காவற்றுறைக்கு ஒரு இலட்சத்து 10 ஆயிரத்து 500 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஏற்கனவே பிரதேச செயலர்களுக்கு 0.57 மில்லியன் ரூபா அனர்த்தத் தணிப்பு நடவடிக்கைகளுக்காக விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# அழிவடைந்த பகுதிகளுக்கு எவரும் செல்லவேண்டாம்!

## பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 2

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக சேதமடைந்த மற்றும் அழிவடைந்த பகுதிகளைப் பார்வையிட பொதுமக்கள் எவரும் செல்லவேண்டாம் என்று பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

இயற்கை இடரால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடுவதற்கு பொதுமக்கள் கூட்டம் கூட்டமாகச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. இது தவறான செயற்பாடு என்பதுடன், உயிராபத்துகள் ஏற்படும் அபாயமும் உள்ளது.



அனர்த்தம் சம்பவித்த இடங்கள் பாதுகாப்பற்றவை. எனவே, அந்தப் பகுதிகளுக்குச் செல்வதை பொதுமக்கள் தவிர்த்துக் கொள்ளவேண்டும். நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிகளில் மீண்டும் நிலச்சரிவு ஏற்படாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. ஆதலால், பொதுமக்கள் பொறுப்புணர்ந்து நடந்து கொள்ளவேண்டும்-என்றனர். (க-இ)

# வானிலை ஆய்வு இணையத்தளம் செயலிழப்பு

தொழில்நுட்பக் கோளாறுகள் காரணமாக வானிலை ஆய்வு மையத்தின் அதிகாரபூர்வ இணையதளம் தற்காலிகமாகச் செயலிழந்துள்ளது. சமீபத்திய வானிலை தகவல்களைத் தெரிந்து கொள்வதற்காக மாற்றுவழிகளைப் பயன்படுத்துமாறு பொது மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது கூடிய விரைவில் முழு சேவையையும் மீட்டெடுக்க முயற்சிப்பதாக அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர்.

இணையத்தளம் முழுமையாக செயற்படும் வரை தற்காலிக தகவல் அறிவிப்புகள் மூலம் பயனர்கள் தொடர்ந்து தகவல்களைப் பெறுமாறு அதிகாரிகள் கேட்டுக் கொண்டுள்ளனர். (ச-இ)


## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## தனியார் பாதுகாப்பு சேவை பெற்றுக்கொள்ளல் தொடர்பான கேள்வி கோரல் 2026

1. வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத் தலைவரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த விலைக் கேள்விதாரர்களிடமிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்ட விலைக் அட்டவணையில் விபரிக்கப்பட்ட இடங்களிற்கு பாதுகாப்பு சேவையினை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
   கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 2025.12.02 - 2025.12.16 நண்பகல் 12.00 மணி
   கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 2025.12.17 மு.ப 10.30 மணிவரை
   கேள்வி திறக்கும் திகதி :- 2025.12.17 மு.ப 10.30 மணி
2. கேள்விகோரல்கள் யாவும் தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.
3. விலைக் கேள்விதாரர் வலிதான வியாபார பதிவினை கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கறுப்புப்பட்டியலில் இடம்பெறாமல் இருத்தல் வேண்டும்.
4. கேள்விதாரர் யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்த நிலையான தொலைபேசி தொடர்பிலக்கத்துடன் கூடிய ஒரு பதிவுக் காரியாலயத்தையோ அல்லது கிளைக் காரியாலயத்தையோ கொண்டிருத்தல் வேண்டும்
   அவசியமேற்படுமிடத்து குறித்த முகவரி நேரில் பரிசீலிக்கப்படும். மேலும் சேவை வழங்குனர் தெரிவில் இவ் விடயம் முக்கியமாக கருத்திற்கொள்ளப்படும்.
5. தகுதிவாய்ந்த விலைக் கேள்விதாரர் விலைக் கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பக் கடிதத்தினை சமர்ப்பித்து அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம் வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரத்தில் மு.ப.9.00 மணி தொடக்கம் பி.ப.14.00 மணி வரை மீளளிக்க முடியாத கேள்விப்படிவக் கட்டணமாக ரூபா 2500.00 இனையும் மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்பு பணமாக ரூபா 15,000.00 இனையும் பணமாக செலுத்துவதன் பேரில் பெற்றுக்கொள்ளலாம்.
6. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரிச்சட்ட ஏற்பாடுகளுக்கமைய சகல வரி அறவீடுகளுக்கும் சகல வரி செலுத்தல்களுக்கும் அனைத்து ஒப்பந்தகாரர்களும் உட்படுதல் வேண்டும்.
7. பாதுகாப்பு சேவை ஊழியர்களுடைய ஆகக்குறைந்த சம்பளமானது சம்பள சபையினால் நிர்ணயிக்கப்படும் கூலி வீதத்துடன் இணங்கியதாக இருத்தல் வேண்டும். கூலி வீதங்கள் உட்பட சித்தியடைவதற்கான தகைமைகளை ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்கள் நிறுவனங்கள் கொண்டிருக்குமிடத்து சேவையின் தரம் மற்றும் அனுபவங்களின் அடிப்படையில் வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படும் தீர்மானமே இறுதியானதாகும்.
8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப் பத்திரங்களை இரு பிரதிகளில் தயாரித்து "தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழு, வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம்" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும் மூலப்படிவம் கொண்ட தபாலுறையில் மூலப் பிரதி எனவும் இணைப்படிவத்தில் இணைப்பிரதி எனவும் எழுதப்படுதல் வேண்டும். பதிவுத் தபாலில் முடிவுத் திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெற வேண்டும். அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரியநேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். பிந்திய விலைக்கேள்வி விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
9. கேள்வி திறக்கப்படும்போது கேள்வியாளரோ அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்கமுடியும்.
10. ETF, EPF பங்களிப்புக்கள் உட்பட தொழிற்திணைக்கள நடைமுறைகளுக்கு இணங்கி செயற்படல் வேண்டும்.
11. கேள்விகோரல் விண்ணப்பங்கள் யாவும் கேள்விகோரல் மூடியதனைத் தொடர்ந்து கேள்விதாரர்கள்/ கேள்விதாரர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
12. மேற்படி பெறுகை கோரல்களை இரத்து செய்யவோ, நிறுத்தி வைக்கவோ, புதிதாக கோருவதற்கோ வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு அதிகாரமுண்டு. இக்கேள்வி அறிவித்தல் தொடர்பாக வலிகாமம் மேற்கு பிரதேச சபை பெறுகைக்குழுவால் எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.
13. மேலதிக விபரங்களை அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| பெறுகை இலக்கம் | சேவை விபரம் | தேவைப்படும் ஆளணி எண்ணிக்கை | | சேவை தேவைப்படும் காலம் |
|---|---|---|---|---|
| | | இரவு | பகல் | |
| NP/14/41(17)/01/IV/PC/26 | பாதுகாப்புச் சேவை | 07 | 03 | 2026.01.01 - 2026.12.31 |

தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழு, வலிகாமம் மேற்கு பிரதேச சபை.
சுழிபுரம்

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## படவரைஞர் பதிவு செய்தல் -2026

வலிகாமம் மேற்கு பிரதேச சபையில் 2026 ஆம் ஆண்டு கட்டட அனுமதிக்கான வரைபடங்களை வரைந்து சமர்ப்பிக்க விரும்பும் படவரைஞர்கள் மற்றும் பதிவினை புதுப்பித்துக் கொள்ள விரும்புபவர்கள் கீழ்வரும் விடயங்களினை கருத்தில் கொண்டு உரிய ஆவணங்களுடன் எதிர்வரும் 02.12.2025 ஆம் திகதி தொடக்கம் 16.12.2025 ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன்னர் தங்கள் பதிவுகளை திட்டமிடல் பகுதியில் மேற்கொள்ளலாம் என்பதனை சகல படவரைஞர்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- NVQ Level -5 Drafting Technology (Building) கற்கை நெறியினை பூர்த்தி செய்தவர்கள் உரிய சான்றிதழ்களினை சமர்ப்பித்து படவரைஞர் பதிவினை மேற்கொள்ளலாம்.
- ஏற்கனவே 2025 ஆம் ஆண்டுக்கான படவரைஞராக பதிவு செய்தவர்கள் NVQ Level -5 Drafting Technology (Building) கற்கைநெறியினை தொடர்வதனை உறுதிப்படுத்தும் ஆவணத்தினை சமர்ப்பித்து பதிவினை புதுப்பித்துக்கொள்ள முடியும்.
- மேற்குறிப்பிட்ட திகதிக்குள் பதிவுகளை புதுப்பிக்கத் தவறும் படவரைஞர்களும் புதிதாக பதிவுகளை மேற்கொள்ளாத படவரைஞர்களும் 2026 ஆம் ஆண்டுக்கான படவரைஞராக வலிகாமம் மேற்கு பிரதேச சபையில் தொழிற்பட முடியாது என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

குறிப்பு:-

- படவரைஞராக புதிதாக பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தலுக்கான விண்ணப்பப் படிவ கட்டணம் - ரூபா 500.00
- படவரைஞராக புதிதாக பதிவு செய்வதற்கான கட்டணம் - ரூபா 3,000.00
- படவரைஞராக புதுப்பித்தலுக்கான கட்டணம் - ரூபா 2,500.00

தவிசாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேசசபை.
சுழிபுரம்.

(CR 46602)A

## வலி தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.
## படவரைஞராகப் பதிவுசெய்தல் / புதுப்பித்தல் - 2026

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் 47 தொடக்கம் 59 வரையானதும் 1978 ஆண்டின் 41ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபையின் புதிய திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி ஒழுங்குவிதி நடைமுறைகளுக்கமைவாகவும் வலி தெற்கு பிரதேசசபையில் 2026 ஆம் ஆண்டுக்கான படவரைஞர்களை பதிவு செய்வதற்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

எனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் புதிதாக பதிவு செய்பவர்களும் 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளவும் / புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கல்வித் தகைமை : Drafting Technology Civil -NVQ Level-5 அல்லது Drafting Technology Civil - NVQ Level-5 கற்கை நெறியினை தொடர்வதற்கான சிபாரிசு கடிதம் இருத்தல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு தலைமை அலுவலகத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு :
படவரைஞராக பதிவு மற்றும் புதுப்பித்தல் படிவ கட்டணம் - ரூபா 1,000.00
படவரைஞராக புதுப்பித்தல் கட்டணம் - ரூபா 5,000.00
படவரைஞராக புதிதாக பதிவு செய்வதற்கான கட்டணம் - ரூபா 4,000.00

தி.பிரகாகஷ்,
தவிசாளர்,
வலி தெற்கு பிரதேசசபை
சுன்னாகம்.
0212240017

02.12.2025

(CS 46601) E


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சீரற்ற காலநிலையால் விவசாயிகள் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.2

சீரற்ற காலநிலையால் யாழ்ப்பாணம் வலிகாமத்தின் பல பகுதிகளிலும் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் மூன்று தினங்களாக கொட்டித் தீர்த்த கனமழையால் விவசாய நிலங்களில் அதிகளவில் மழை வெள்ளம் தேங்கி நிற்பதைக் காணமுடிகிறது. அதனால் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். புயல் காற்றால் வாழைச் செய்கையாளர்கள் பேரழிவைச் சந்தித்துள்ளதுடன் மரக்கறிச் செய்கையாளர்களும் கடும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர். (எ-41-66-17)

## இன்னொரு...

அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

டித்வா புயலின் அமுக்க நிறைவுச் செயற்பாட்டின் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் சில பகுதிகளுக்கு நேற்றுக் கனமழை கிடைத்தது. எனினும் நேற்று முதல் மழை படிப்படியாகக் குறைந்து விடும். எனவே மக்கள் பதற்றமடையத் தேவையில்லை.

மீண்டும் ஒரு புயல் வருமா என பலர் வினவுகின்றார்கள். இன்றைய நிலையில் வங்காள விரிகுடாவில் டித்வா புயலைத் தவிர வேறு எந்த காற்றுச் சுழற்சியோ, வளி மண்டல மேலடுக்கு சுழற்சியோ இல்லை. ஆனாலும் எதிர்வரும் ஜனவரி இறுதிப்பகுதி வரை வடகீழ்ப் பருவக்காற்று காலம் என்பதனால் அது வரைக்கும் இடையிடையே மிதமான, கனமான மற்றும் மிகக்கன மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

இடைப்பட்ட காலத்தில் ஏதாவது தீவிர வானிலை நிகழ்வுகள் இடம்பெறும் வாய்ப்பிருந்தால் உரிய காலத்தில் உங்களுக்கு தெரிவிக்கப்படும். அதுவரை தேவையற்ற வதந்திகளைப் புறந்தள்ளுங்கள்.

டித்வா புயல் இன்னும் கரையைக் கடக்கவில்லை என்பதனால் வடக்கு மாகாணக் கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படும். எனவே, மீனவர்கள் கடலுக்கு செல்வதில் அவதானமாக இருப்பது அவசியம் - என்றார். (அ-ம-26)

## வடக்கு...

னெடுக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வடமாகாண இணைப்பாளர் மருத்துவ கலாநிதி கதிரமலை உமாசுதன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால் நடமாடும் மருத்துவ சேவைகள் மற்றும் துயர் துடைப்பு மருத்துவ முகாம்கள் முன்னெடுக்கப்படுகின்றன. தற்போது நாடு முழுவதும் நிலவி வரும் அசாதாரண சூழலைக் கருத்திற்கொண்டு, தாய்ச் சங்கத்தின் வழிகாட்டலின் கீழ் இந்த நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன - என்றுள்ளது. (அ-ம-100-26)

## ம.உ.ஆணைக்...

மற்றும் பிரதேச காரியாலயங்களில் இன்று தொடக்கம் எதிர்வரும் 5ஆம் திகதிவரை இடம்பெறவிருந்த விசாரணைகளே மறு அறிவித்தல்வரை பிற்போடப்பட்டுள்ளன. (அ-ம)

## யாழ்ப்பாண...

மீட்கப்பட்டுள்ளார். தணிகாசலம் பத்மநிகேதன் (வயது -36) என்ற இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

கடந்த இரு தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பேருந்து புத்தளம் வீதியில் கலா ஓயா பகுதியில் வெள்ளத்தில் சிக்கியது. பேருந்துக்குள் இருந்தவர்கள் அருகிலிருந்து கூரைமீது ஏற்றப்பட்டு, பின்னர் இரு நாள்கள் கடுமையான போராட்டத்தின் பின்னர் மீட்கப்பட்டனர்.

அந்தப் பேருந்தில் இருந்த தணிகாசலம் பத்மநிகேதன் என்ற இளைஞர் ஒருவர் காணாமற் போனதாக அவரின் உறவினர்கள் நொச்சியாகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த நிலையிலேயே கடந்த இரண்டு நாள்களாக இடம்பெற்ற தேடுதல்களின் பின்னர் நேற்று அந்த இளைஞரின் சடலம் மீட்கப்பட்டது. (அ-ம-110)

## யாழில்...

இது தொடர்பில் அவர் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

எலிக்காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த வாரம் இருவர் உயிரிழந்தனர். கரவெட்டி, சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரியின் பிரிவிலேயே இந்த மரணங்கள் சம்பவித்துள்ளன. கடந்த வருடமும் நவம்பர், டிசெம்பர் மாதங்களில் எலிக் காய்ச்சல் தீவிரமாகப் பரவி 8 பேர் உயிரிழந்தனர். எனவே, இந்த நோய் தொடர்பில் பொதுமக்கள் அவதானமாக இருப்பது மிகவும் அவசியமாகும்.

எலிக்காய்ச்சல் ஒரு வகை பக்றீரியாவினால் ஏற்படுகின்றது. எலிகள் போன்ற விலங்குகளின் சிறுநீர் மூலம் வெள்ளநீர், வயல்நீர், சேற்று நிலங்களில் கிருமிகள் சென்றடைகின்றன. மனிதர்கள் வெள்ளநீரில், வயல் நிலங்களில், சேற்று நிலங்களில் வேலை செய்யும் போது அவர்களின் தோலில் உள்ள புண்கள் அல்லது காயங்கள் மூலம் கிருமிகள் மனித உடலுக்குள் செல்கின்றன. கடுமையான காய்ச்சல், கடுமையான தசைவலி, கடுமையான தலையிடி, இருமல், கண்கள் செந்நிறமாதல், வாந்தி, சிறுநீருடன் இரத்தம் வெளியேறுதல், சிறுநீர் வெளியேறும் அளவு குறைதல் போன்றன இதன் அறிகுறிகளாக உள்ளன. இந்த நோய் ஏற்பட்டால், சிறுநீரகம், சுவாசத்தொகுதி, இதயம், ஈரல், மூளை போன்ற உறுப்புக்கள் பாதிக்கப்பட்டு மரணம் சம்பவிக்கும்.

இந்த நோயானது பெரும்பாலும் வயல்கள், சேற்று நிலங்களில் பயிர்செய்யும் விவசாயிகள் மத்தியிலும், கடல்நீரேரிகளில் மீன்பிடித்தொழிலில் ஈடுபடுபவர்கள் மத்தியிலும், வெள்ள நீருடன் தொடுகையில் ஈடுபடுபவர்கள் மத்தியில் அதிகம் காணப்படுகின்றது. இந்நோயிலிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ள வயல், சேற்று நிலங்களில் வேலை செய்யும் விவசாயிகள் கடல்நீரேரிகளில் மீன்பிடிப்பவர்கள் உடலில் காயங்கள் அல்லது புண்கள் இருப்பின் அவற்றை நீர் உட்புகாத வகையில் கட்டுப்போடுதல் வேண்டும். வெள்ளநீரில் அல்லது அசுத்தமான நீரில் பணியாற்றும் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் கால், கைகளுக்கு பாதுகாப்பு அங்கிகளை அணிய வேண்டும்.

வயல்களில், சேற்றுநிலங்களில் வேலை செய்யும் விவசாயிகளும், கடல்நீரேரி மீன்பிடித்தொழிலாளர்கள், சுத்திகரிப்புத் தொழிலாளிகளும் இந்த நோய்க்கான தடுப்பு மருந்தை உங்களது பிரதேசத்திற்குரிய சுகாதார மருத்துவக அதிகாரி பணிமனையில் அல்லது பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடம் பெற்றுக்கொள்ளலாம். வெள்ளநீருடன் தொடுகை ஏற்படுத்திக் கொள்பவர்களும் மேற்படி தடுப்பு மருந்தைப் பெற்றுக்கொள்ளலாம் - என்றுள்ளது. (அ-ம-100-26)

## நிர்ணய...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அனர்த்த நிலைமைகளைக் காரணம் காட்டி வர்த்தக நிலையங்கள் செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்துகின்றன என்றும், பொருள்களைப் பதுக்குகின்றன எனவும், விலை நிர்ணயத்தை மீறி விற்பனை செய்கின்றன என்றும் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதையடுத்து, நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையால் நேற்றுத் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் நகர்ப் பகுதிகள், காங்கேசன்துறை வீதி மற்றும் திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களில் திடீர்ப் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது நிர்ணய விலையை விட அதிக விலைக்கு பொருள்களை விற்பனை செய்த வர்த்தக நிலையங்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறான விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் யாழ்ப்பாணம் மாவட்டம் முழுவதும் தொடர்ச்சியாக இடம்பெறும் - என்றார். (அ-ம-66-26)

## டித்வா...

துள்ளனர். கொழும்பில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகத்தில் எதிர்வரும் புதன்கிழமை இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. கடந்தகால இயற்கை இடர்களின்போது, ரணிலின் தலைமையில் வெற்றிகரமாகப் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அந்த அனுபவத்தின் அடிப்படையிலேயே இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடாகியுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

டித்வா புயலால் ஏற்பட்ட பேரழிவுகளின் பின்னர், அனைத்துக் கட்சிகளின் தலைவர்களையும் உள்ளடக்கிய கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கையை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொள்கின்றார் என்றும் வஜிர அபேவர்த்தன கூறியுள்ளார்.

எனினும், இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்வதை இதுவரை பிரதான கட்சிகள் எவையும் உறுதிப்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## குஞ்சுக்குளம்...

உலருணவுப் பொதிகள் அனுப்பப்பட்டுள்ளன.

குஞ்சுக்குளம் கிராமத்துக்கான தரைவழிப்பாதை முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் அந்தப் பகுதி மக்கள் கடந்த மூன்று நாள்களாக உதவித் திட்டங்கள் இல்லாமல் பெரும் அவதிப்பட்டு வந்தனர். இதையடுத்தே, ஹெலிகொப்டர் மூலம் அவர்களுக்குத் தேவையான உதவிப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

## நயினாதீவு-...

குத் திரும்பியுள்ளது என்று நயினாதீவு தனியார் படகு உரிமையாளர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். இதேவேளை குறிகாட்டுவான்-யாழ்ப்பாணம் தனியார் பேருந்துச் சேவையும் நேற்று முதல் சேவையை ஆரம்பித்துள்ளது என்று புங்குடுதீவு தனியார் பேருந்துச் சங்கத்தினர் தெரி வித்துள்ளனர். (அ-எ-41-66)

## கறுப்புப்...

ஈடுபடப்போவதாக கிராம அலுவலர்கள் அறிவித்துள்ளனர்.

கிளிநொச்சி பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தில் வெள்ளப் பேரிடர் உதவி வழங்கலின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தன்னைத் தாக்கினார் என்று கிராம அலுவலர் ஒருவர் குற்றஞ்சாட்டியுள்ளார். இது தொடர்பில் பொலிஸ் நிலையத்திலும் அவர் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார். இதையடுத்தே, நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரனைக் கண்டித்து ஒரு வாரத்துக்குக் கறுப்புப் பட்டியுடன் பணியில் ஈடுபடப் போவதாக கிளிநொச்சி மாவட்ட கிராம அலுவலர்கள் தெரிவித்துள்ளனர். எதிர்வரும் ஒரு வாரத்துக்குள் சட்டரீதியான தீர்வுகள் கிடைக்காத விடத்து மேலதிக செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர். (அ-ம-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசின் மானியத்தில் டிஜிற்றல் அடையாள அட்டை

## அமைச்சர் எரங்க தெரிவிப்பு

**கொழும்பு, டிசெ.2**

**டிஜிற்றல் அடையாள அட்டை அறிமுகப்படுத்துவதற்கு இந்திய அரசின் மானிய உதவி மற்றும் இலங்கை அரசின் நிதி ஒதுக்கீடுகள் பெறப்படுகின்றன. இந்திய அரசாங்கத்தின் உதவியுடன், இந்த டிஜிற்றல் அடையாள அட்டை வழங்கும் முறை இந்திய நிறுவனங்கள் மூலமாக செயற்படுத்தப்படும். குடிமக்கள் தரவின் இரகசியத்தன்மையும் பாதுகாக்கப்படும் என டிஜிற்றல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில் இலங்கை குடிமக்களுக்கு ஒரு டிஜிற்றல் அடையாள அட்டை அறிமுகப்படுத்தப்படும். இந்த டிஜிற்றல் அடையாள அமைப்பின் அறிமுகம் இலங்கையின் டிஜிற்றல் உருமாற்றப் பயணத்தில் ஒரு முக்கியமான படியாகும்.

நம்பகமான அடையாளம், ஒரு தனிநபரின் பிறப்பு முதல் இறப்பு வரை 100 சதவீத நம்பகமான அடையாளக் காப்பீட்டை உறுதி செய்து, ஒரு தனிநபரின் வாழ்நாள் முழுவதும் சேவைகளுக்கான தொடர்ச்சியான அணுகலை வழங்குகிறது.

வினைத்திறனான பொது சேவை குடிமக்கள் அரசு சேவைகள் மற்றும் தனியார் துறை சேவைகளை (வங்கி, சுகாதாரம், கல்வி போன்றவை) மிக விரைவாகவும், எளிதாகவும், ஒன்லைன் முறைகள் மூலமாகவும் அணுக உதவுகிறது. தனிப்பட்ட அடையாளங்களைப் பாதுகாக்க முடியும். இந்த டிஜிற்றல் அடையாளத்தை தயாரிப்பதற்கான முறை சர்வதேச தரநிலைகளுக்கிணங்க மிக உயர்ந்த பாதுகாப்புடன்வடிவமைக்கப்பட்டுள்ளது.

குடிமக்களின் மக்கள்தொகைத் தகவல் (பெயர், முகவரி, பிறந்த திகதி) மற்றும் பயோமெட்ரிக் தகவல்கள் (கைரேகைகள், கருவிழி ஸ்கான் மற்றும் முக புகைப்படம்) ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மையங்களில் இந்தத் திட்டத்துக்கான செயன்முறைகள் முன்னெடுக்கப்படுகிறது.

மேலும், இந்தத் தரவு சைபர் பாதுகாப்பு விதிகளின் கீழ் உள்ளூரில் நிறுவப்பட்ட தரவு மையங்களில் மட்டுமே பாதுகாப்பாகச் சேமிக்கப்படுகிறது. எனவே, குடிமக்கள் தரவின் ரகசியத்தன்மை மற்றும் பாதுகாப்பு குறித்து எந்தச் சந்தேகமும் இருக்கக்கூடாது என்று உறுதியளிக்கிறேன். இதில், இலங்கை ரூபா 10 பில்லியனுக்கும் அதிகமான தொகை இந்திய அரசிடமிருந்து உதவியாகப் பெறப்படுகிறது. டிஜிற்றல் அடையாள அட்டையைத் தயாரிக்கும் செயன்முறை தொடர்பான அனைத்து ஒப்பந்தங்களையும் சபையில் சமர்ப்பிக்க முடியாது. இருதரப்பு இராஜதந்திர ஒப்பந்தங்களின்படி, இந்த ஒப்பந்தங்களின் உள்ளடக்கங்களை ஒருதலைப்பட்சமாக வெளியிட முடியாது - என்றார். (ச-இ)

# சீரற்ற காலநிலை 10,214 குடும்பங்கள் திருமலையில் பாதிப்பு

கொழும்பு, டிசெ. 2

சீரற்ற வானிலை மற்றும் டித்வா புயல் காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் மொத்தமாக 10 ஆயிரத்து 214 குடும்பங்களைச் சேர்ந்த 31 ஆயிரத்து 634 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதில் 294 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் பாதிக்கப்பட்ட 9602 குடும்பங்களைச் சேர்ந்த 29 ஆயிரத்து 809 நபர்கள் உறவினர்கள் மற்றும் சொந்த வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். 14 பாதுகாப்பான தற்காலிக முகாம்களில் 612 குடும்பங்களைச் சேர்ந்த 1825 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (ச-இ)



# தொடரும் சீரற்ற காலநிலையால் இறந்து ஒதுங்கும் கால்நடைகள்!

யாழ்., டிசெ.2

சீரற்ற காலநிலை காரணமாக தேங்கியிருந்த வெள்ளத்தில் இருந்து பெருமளவு கால்நடைகள் உயிரிழந்த நிலையில் மீட்கப்படுகின்றன. வடமராட்சி கிழக்கு புன்னையடிப் பகுதியில் பெருமளவான கால்நடைகள் வீதிகளில் இறந்து கிடப்பதை அவதானிக்க முடிகின்றது. இறந்து கிடக்கும் கால்நடைகளை அகற்றும் பணிகளை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் மேற்கொண்டு வருகின்றன. (க-26)



தனுஷ்கோடி தெற்கு மன்னார் வளைகுடா கடற்கரையில் கரைவலை மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்களின் வலையில் வாயில் இரும்புத் தூண்டிலுடன் சிக்கிய அரியவகை கடல் ஆமை மீண்டும் மீனவர்களால் கடலில் விடப்பட்டுள்ளது. வலையில் சிக்கியிருந்த ஆமை மீட்கப்பட்டு முதலுதவிச் சிகிச்சை அளித்து உடனடியாக கடலில் பாதுகாப்பாக விடப்பட்டுள்ளது. (எ-56)

# கிளிநொச்சியிலேயே உச்சக்கட்ட மழை!

கிளிநொச்சி, டிசெ.2

கடந்த சனிக்கிழமை காலை தொடக்கம் நேற்றுமுன்தினம் காலை வரையான 24 மணிநேரத்தில் கிளிநொச்சி மாவட்டத்திலேயே உச்சக்கட்ட மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது என்று இடர் முகாமைத் துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. இதன்படி கிளிநொச்சி மாவட்டத்தின் பொக்கனிப் பகுதியில் 274 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இதற்கு அடுத்தபடியாக மன்னார் பொற்கேணியில் 210 மில்லிமீற்றர் மழையும், மன்னார் மடுவில் 193 மில்லிமீற்றர் மழையும், கேகாலை துனுமல்லே பகுதியில் 181 மில்லிமீற்றர் மழையும், கம்பஹா கிரிந்திவலையில் 121 மில்லிமீற்றர் மழையும், நுவரெலியா கிலேண்டில்ட் பகுதியில் 104 மில்லிமீற்றர் மழையும் பதிவாகியுள்ளது. (ம)

# பல்லாயிரம் கால்நடைகளைக் காணவில்லை என அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 2

நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக பல்லாயிரம் கால்நடைகளைக் காணவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. குளத்தில் நீரேந்து பகுதிகளில் மேய்ச்சலில் ஈடுபட்ட பல கால்நடைகள் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. அத்துடன், பட்டிகளை வெள்ளம் சூழ்ந்ததாலும் ஏராளமான கால்நடைகள் காணாமற்போயுள்ளன. இழப்பீடு வழங்கும் நடவடிக்கைக்காக அது தொடர்பான கணக்கெடுப்பு விரைவில் இடம்பெறவுள்ளது. (ம)

**வீடு வாடகைக்கு உண்டு**

யாழ். ஊரெழுப் பகுதியில் நவீன வசதி கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 074 315 3557

**பெயர் மாற்றம்**

காளிகோவில் வீதி, ஏழாலை மத்தி ஏழாலையில் வதியும் **பேரம்பலம் சிவஞானச்செல்வம்** ஆகிய நான் எனது பெயரை **பேரம்பலம் திருஞானச்செல்வம்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **பேரம்பலம் திருஞானச்செல்வம்** என்றே கையொப்பமிட்டு பயன்படுத்துவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச மக்களுக்கு தெரிவிக்கின்றேன்.

(CS 30834)A

**பேரம்பலம் திருஞானச்செல்வம்**

# மரங்களை அகற்றும் பணி சாவகச்சேரியில் துரிதகதி

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வீதிகளில் வீழ்ந்து காணப்படும் மரங்களை அகற்றும் பணிகளில் நகரசபையின் இடர்முகாமைத்துவகக் குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த சனிக்கிழமை இரவு சாவகச்சேரி வடக்கு வட்டாரத்தில் மருதடிச் சந்திக்கு அருகில் வேருடன் வீதியில் வீழ்ந்த பாரிய மரமும், நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை சாவகச்சேரி நகர வட்டாரத்தில் ஹென்ஸ்மன் வீதியில் வீழ்ந்த மரமும் வெட்டி அப்புறப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், ஏனைய பகுதிகளிலும் மீட்புப்பணிகள் தொடர்கின்றன. (ம-41,9)

**வேலைவாய்ப்பு**

யாழ் நகரத்தில் அமைந்துள்ள எமது வியாபார நிறுவனத்திற்கு பணியாற்ற பின்வரும் பதவிகளுக்கு பொறுப்பும், அர்ப்பணிப்புமுள்ள பெண்/ ஆண் பணியாளர்கள் தேவை.

- Chief / Senior Accountant
- Accounts Assistance
- Biller / Cashier (Kilinochchi)

Sales, Billing Stock Handling தொடர்பான அடிப்படை அறிவு அவசியம்.

முன் அனுபவம் கணனி தொடர்பான அறிவு (ERP) அவசியம்.

உங்கள் சுயவிபரக் கோவையை Whatsapp மூலம் அனுப்பி வைக்கவும்.

077 687 8187



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் [illegible] உள்ள அவர்களது பணிமனையில் 02.12. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.